பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00


www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 01 வெள்ளிக்கிழமை (15.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 170

# ஷெல், கனரக ஆயுதத் தாக்குதலை நிறுத்துக!

# மக்களை மனிதக் கேடயங்கள் ஆக்காதீர்!!

## அரசிடமும் புலிகளிடமும் ஒபாமா வலியுறுத்து



வாஷிங்ரன், மே 15

★ ஆஸ்பத்திரி மற்றும் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது ஷெல், கனரக ஆயுதத் தாக்குதல்கள் மேற்கொள்வதை அரசாங்கப் படைகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

★பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதை தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடியாகக் கைவிட வேண்டும்.

★இரு தரப்புக்களும் அரசியல் விடயங்களை ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு, மோதலில் அப்பாவித் தனமாக இடைநடுவில் சிக்கியுள்ள மக்களின் உயிர்களுக்கு முதன்மை அளிக்க வேண்டும். (15ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு எதிராக நோர்வேயில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 15

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சுக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சுக்கு முன்னால் நேற்று புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர்கள் கலந்துகொண்டு (16ஆம் பக்கம் பார்க்க)

## ஒபாமாவின் போர் நிறுத்த வேண்டுகோளை வரவேற்பதாக விடுதலைப் புலிகள் அறிவிப்பு

கொழும்பு, மே 15

வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க அங்கு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வேண்டுகோளை தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வரவேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக நேற்று வியாழக்கிழமை பா.நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் விவரிக்கப்பட்டமை என இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இலங்கையில் தமிழர்கள் அனுபவித்து வரும் பெரும் துயரம் பற்றி இரக்கத்துடன் பேசியதற்காகவும் இலங்கையில் நடைபெற்று வரும் மனிதநேயமான சிக்கல்களைத் தீர்க்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியதற்காகவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு இலங்கையிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழர்கள் நன்றியையும் வரவேற்பையும் தெரிவிக்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையும் உறுதி (16ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் புதனன்று அடங்காப்பற்றுப் பேரணி

கொழும்பு, மே 15

கனடாவின் ரொறன்ரோ நகரில் நடைபெற்ற மாபெரும் 'அடங்காப்பற்று' பேரணியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனேடியத் தமிழ் மாணவர் சமூகமும் கனேடியத் தமிழர் சமூகமும் இணைந்து இப்பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

ரொறன்ரோ மாநில நாடாளுமன்றத்துக்கு முன்பாக உள்ள குயின்ஸ் பார்க் மைதானத்தில் இருந்து புதன்கிழமை தொடங்கிய இப் பேரணி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய இறுதி வைத்தியசாலையும் முடக்கம்; நோயாளர்கள் உணவு, தண்ணீரின்றி பெரும் அந்தரிப்பு

கொழும்பு, மே 15

வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள ஒரேயொரு வைத்தியசாலையில் கடமை புரிந்த வைத்தியர்களும் பணியாளர்களும் தமது பணிகளை கைவிட்டுள்ளனர் என அங்கிருக்கும் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என இணையத்தளங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான ஷெல் வீச்சுகளினால் வைத்தியர்களும் பணியாளர்களும் பதுங்கு குழிகளை விட்டு வெளியேற முடியாத நிலையில் அதற்குள்ளேயே முடங்கியுள்ளனர்.

அதேவேளை, வைத்தியசாலையை விட்டு வெளியேற முடியாத நோயாளிகள் உணவு மற்றும் தண்ணீருக்காக அழும் (16ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தக்களரியை தவிர்க்குமாறு அரசிடம் வற்புறுத்த கொழும்பு விரைகிறார் ஐ.நாவின் நம்பியார்



நியூயோர்க், மே 15

மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து மேலும் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்க்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக உயர் மட்ட அதிகாரியை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அவசரமாகக் கொழும்புக்கு அனுப்புகிறார்.

செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் மரியே ஒக்காபே அம்மையார் இத் தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

செயலாளர் நாயகம் தமது பிரதம அதிகாரியான விஜய் நம்பியாரை இலங்கைக்கு அனுப்பவிருக்கிறார் என்றும் பெரும்பாலும் நேற்றிரவு அவர் இலங்கைக்குப் புறப்பட விருந்தார் என்றும் பேச்சாளர் மேலும் கூறினார்.

இரத்தக்களரிக்கு முடிவு ஏற்படுத்தி, மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு நம்பியார் இலங்கை அரசிடம் வற்புறுத்துவார் என்றும் பேச்சாளர் மேலும் சொன்னார்.

முல்லைத்தீவில் சிக்கியுள்ள 50 ஆயிரம் மக்களின் நிலை குறித்து தமது கரிசனையை (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைவரம் உத்தியோகபூர்வமாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆராய்வு

நியூயோர்க், மே 15

ஐ.நா. பாதுப்புச் சபை கடந்த புதன்கிழமை முதற் தடவையாக இலங்கை நெருக்கடி குறித்து உத்தியோகபூர்வமான விதத்தில் ஆராய்ந்துள்ளதுடன், மோதல் காரணமாகப் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை நெருக்கடி தொடர்பாக பாதுகாப்புச் சபையில் உத்தியோகப் பற்றற்ற விதத்தில் முன்னர் பல தடவைகள் ஆராயப்பட்டபோதிலும் உத்தியோகபூர்வமான விதத்தில் ஆராயப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா, சீனா, வியட்நாம், லிபியா ஆகிய நாடுகள் இலங்கை நெருக்கடி ஓர் உள்விவகாரம் எனத் தெரிவித்து வந்ததுடன் இதன் காரணமாக உத்தியோகபூர்வமாக (15ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்காலில் சிக்குண்டுள்ள மக்களுக்கு எந்த மனிதாபிமான நிறுவனமும் உதவமுடியாத நிலை!

### சூழ்நிலையை விவரிக்கிறார் செஞ்சிலுவை அதிகாரி

ஜெனீவா, மே 15

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இப்போதுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலையில், அங்கு சிக்குண்டுள்ள மக்களுக்கு எந்த மனிதாபிமான நிறுவனமும் உதவமுடியாது. பாவம் மக்கள், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள தமக்குத் தெரிந்த வழிமுறைகளை கைக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் தலைமையகத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் பியரி கரஹன் புஹுல்.

முள்ளிவாய்க்காலில் சிக்குண்டுள்ள மக்களுக்கு என உணவுப் பொருள்களைத் தமது (16ஆம் பக்கம் பார்க்க)

## 1,500 பொதுமக்கள் நேற்று மீட்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 15

முல்லைத்தீவில் புதிதாகப் பிரகடனம் செய்யப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயத் திலிருந்து 1,500 பேரை படையினர் நேற்று மாலை மீட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்தது.

படையினர் பாதுகாப்பு வலயப் பகுதிக் குள் முன்னேறி வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதிக்குள் சென்று விட்டனர் என்றும் அங்கு சிக்கியிருந்தவர்களில் 1,500 பேரை நேற்று மாலை பாதுகாப்பான இடத்துக்குக் கூட்டி வந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு (16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷெல் வீச்சு மற்றும் தாக்குதல்களிலிருந்து தப்பிவிட வேண்டும் என்பதற்காக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அவசர அவசரமாக இடம்பெயர்ந்து செல்லும் பாதுகாப்பு வலய மக்கள்.

# சண்டிலிப்பாயில் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், மே 15

அலங்கரிக்கப்பட்ட சேலைகள் உள்ளிட்ட பெண்களுக்கான ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் இன்றும் நாளையும் மு.ப 9 மணிமுதல் பி.ப 4 மணிவரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனமும் தேசி இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து பெண்களை சுயசார்பு நிலைக்கு கொண்டுவரும் நோக்கில் முன்னெடுத்த சேலை அலங்காரப் பயிற்சியைப் பூர்த்தி செய்த பெண்களால் உருவாக்கப்பட்ட ஆடைகளே கண்காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகின்றன.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ். கரித்தாஸ் - கியூடெக் இயக்குநர் அருட்பணி கி.ஜோ.ஜெயக்குமாரும் கலந்து கொள்வர்.

(1-7)

# கல்வியியற்கல்லூரிக்கு தெரிவான மேலும் 23 பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். தேசிய கல்வியற்கல்லூரிக்கு இவ்வாண்டு அனுமதி பெற்றவர்களில் மேலும் சில பாடநெறிகளுக்கு தெரிவானவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்க[ள்] எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9மணி[க்கு] உரிய ஆவணங்களுடன் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

தெரிவானவர்களின் விவரம் வருமாறு:-

கணிதம் (தமிழ் மொழி மூலம்)

வி.ஞானசிங்கம் - இளவாலை, வி.விதுசிகா - புலோலி தெற்கு, ரி.மயூரன் - தும்பளை, கே.தாட்சாயினி - பண்ணாகம், ரி.புஸ்பகாந்தன் - காரைநகர், கே.சுரேஸ் - கரணவாய், எஸ்.பரணீதரன் - இணுவில், எஸ்.எஸ். தவக்குமார் - காரைநகர், ரி.தனரூபன் - அச்சுவேலி, என்.உசாலினி - சுதுமலை, கே.சிவரூபினி - சிறுப்பிட்டி, எம்.நீபன் - மல்லாகம், எஸ்.அனோஜா - சிறுவிளான், ஏ.அனுஷ்ரன் - புலோலி மத்தி, கே.தர்சினி - மிருசுவில் -

விஞ்ஞானம் (தமிழ் மொழி மூலம்)

பி.கஜிதா - அளவெட்டி, பி.கஜேந்தினி - பொன்னாலை, ரி.கௌரி - பொலிகண்டி, ஏ.கேசிதா - 161 பிறவுண்றோட், யாழ், வி.அபிராமி - மூளாய், பி.நிருபா - தொண்டைமானாறு, என்.துஷ்யந்தன் - வண்ணார்பண்ணை, எஸ்.சத்தியாகேசன் - உரும்பிராய், எஸ்.தாட்சாயினி - கைதடி தெற்கு, ஏ.சானுஜா - உயரப்புலம், ரி.றெமினா - சுதுமலை, கே.திலீபன் - சாவகச்சேரி, எஸ்.ராதிகா - வைமன் றோட், நல்லூர், ரி.சிந்துஜா - கோப்பாய் -

கலை

எஸ்.வாகீசன் - இணுவில் கிழக்கு, கே.பிரகாஸ் - நீர்வேலி மேற்கு, கே.தபேந்திரன் - மிருசுவில், பி.நதியா - அச்சுவேலி, எஸ். ஐங்கரன் - உடுவில் கிழக்கு, பி.நிசாந்தன் - புங்குடுதீவு, எஸ்.சோபனராஜ் - சுதுமலை, கே.யாழ்வேந்தன் - வளலாய், எம்.கிருபசேன[ன்] - இணுவில் மேற்கு, எஸ்.பிர தீபன் - நல்லூர் வடக்கு, பி.விஜிதரன் - இணுவில் கிழக்கு.

# இன்று அரை நாளே வங்கிகள் இயங்கும்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்ட வங்கிகள் அனைத்தும் இன்று அரைநாள் மட்டுமே இயங்கும் என யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

அரைநாள் விடுமுறை தினமாக இன்று பிரகடனப்படுத்தப்பட்டதால் யாழ். மாவட்ட வங்கிகள் பின்வரும் நேரங்களில் வாடிக்கையாளர்களுக்குத் தமது சேவையை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை வங்கி ஆகியவை காலை 8.30 - 10 மணிவரையும், வர்த்தக வங்கி 9 - 12 மணி வரையும், செலான்வங்கி 9 - 10 மணி வரையும், தேசிய சேமிப்பு வங்கி 8.30 - 11 மணி வரையும் வாடிக்கையாளர்களுக்கு தமது சேவையை வழங்கும் எனவும் வங்கியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (1-06)

# அரியாலையில் பட்டப்பகலில் ஆசிரியரின் வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 15

பட்டப்பகல் வேளையில் வீட்டுக்காரர் வேலைக்குச் சென்ற வேளை திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து பதினைந்து பவுண் எடையுள்ள தங்கநகைகளை சூறையாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் அரியாலை புறூடி லேனில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்காரர் வெளியே சென்றதைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டின் கூரை ஓட்டை பிரித்து உள்ளே சென்று அங்கு அலுமாரியில் உள்ள தங்க நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

இந்த திருட்டு தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(1-224)

# சிறந்த நூலகர் விருது தனபாலசிங்கத்திற்கு

யாழ்ப்பாணம், மே 15

யாழ். பொதுசன நூலக நூலகர் க.தனபாலசிங்கத்திற்கு வடமாகாணத்தின் சிறந்த நூலகருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளாக யாழ். பொதுசன நூலகத்தை தனபாலசிங்கம் சிறப்பான முறையில் நிர்வகித்து வருகிறார். தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை இவரை வடமாகாணத்தின் சிறந்த நூலகராக தெரிவு செய்துள்ளது. இவருக்கான விருது உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனால் கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் சபை மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

சுன்னாகம் பொதுசன நூலகம், கொக்குவில் பொதுசன நூலகம் என்பன குடாநாட்டில் சிறந்த நூலகங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(அ-120)

# நூலக வாரத்தையொட்டி வலி.தெற்கில் விசேட நிகழ்வுகள் இடம்பெறுகின்றன

சுன்னாகம், மே 15

தேசிய நூலக வாரத்தையொட்டி வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தில் பல்வேறு நிகழ்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கடந்த செவ்வாயன்று பாவனையாளர் கல்விக் கருத்தரங்கும் புதனன்று மூத்த பிரஜைகளுக்கான நூலக சேவைப்பிரிவு ஆரம்ப வைபவமும் நேற்று வியாழக்கிழமை இளைஞர், மகளிர் நூலகப்பிரிவு ஆரம்ப வைபவமும் நடைபெற்றன. கலைத்துவ திரைப்படக் காட்சியாக ஒஸ்கார் விருது பெற்ற ஸ்லம்டொக் மில்லியனர் படமும் காண்பிக்கப்பட்டது.

இன்று காலை 9.30 மணிக்கு சிறுவர் நூலக சேவைப் பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுவதோடு சிறுவர் கதை வேளை, கன்னி மூலமான கற்றல் செயற்பாடு என்பனவும் இடம்பெறவுள்ளன.

உடுவில் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் செல்வி இ.சசிகலா இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நாளையும், நாளை மறுதினமும் கட்டுரை, கவிதை பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. திங்கட்கிழமையன்று சமுதாய தகவல் பிரிவு அங்குராப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

(1-38)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிர்வாக அங்கத்தவரான
திருமதி கிருஸ்ணானந்தி செல்வராஜன்
அவர்களின் கணவர்

### திரு.சுப்பிரமணியம் செல்வராஜன்

அவர்களது அகால மரணத்தையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உறவுகளுடன் எம்மையும் இணைத்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தி பெறுவதாக.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

வாழ்வக சமூகம்.


IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம்

பிரிவு 1: 18.05.2009
பிரிவு 2: 23.05.2009
காலை 10.00 மணி

அனைவருக்கும் கணனிக்கல்வி என்னும் நோக்கில் குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவையை வழங்கிவரும் IBMS நிறுவனத்தில் இணைந்து நீங்களும் குறுகிய காலத்தில் கணனிக் கல்வியில் வல்லுநராகலாம்

Courses
1.Dip.in Microsoft office
2.Dip.in Desk Top Publishing
3.Dip.in Internet Techonology
4.Dip.in Hardware Technology
5.Dip.in Computerized Accounting
6.Diploma in Video Editing



குறிப்பிட்ட கணனிக்கற்கை நெறிகளுக்கான பிரத்தியேக பிரிவுகளும் ஆரம்பமாகும்.

குறைந்த கட்டணத்துடன் கணனிக்கல்வியில் வல்லுனராகும் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8232 Fax: 021 222 6933
கிளைகள் :- நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. சங்கத்தானை சாவகச்சேரி.



விற்பனைக்குண்டு

மகோகனி, சப்புபலகை, தீராந்தி வகைகள்

பீடிங், மோல்டிங் சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:- இல.194, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (கடைத்தெருப்பிள்ளையார் கோயில் முன்பாக)
தொ.பே: 0719134767, 0777073702



தேவை

கணனி தொழில்நுட்ப துறை சார்ந்த நிறுவனத்திற்கு கம்பியூட்டர் ரைப்பிங், போட்டோசொப் மற்றும் இதர வேலைகளில் அனுபவம் உள்ள பெண் பிள்ளை தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 16.05.2009 சனி காலை 9 - 5 மணிவரை
T.P.:021 222 7646 Arrul Global Express
இல.1, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.



தேவை

காசாளர், சேல்ஸ் வான்சாரதி, சிட்டை எழுதுனர் தேவை. 15.05.2009 காலை 9.30 - 12 மணிவரை நேரில் வரவும்.

(யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள், முன் அனுபவமுள்ளவர்கள் மட்டும்)

30, ... வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கனகரத்தினம்



தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகரத்தினம் நேற்று (14.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், திருமணிதேவியின் அன்புக் கணவரும், சந்தானாநங்கை, நற்குருவேந்தன், அருள்வேந்தன், காலஞ்சென்ற கஜேந்திரவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராஜன், மலர்மகள், நந்தினி, ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியநந்தினி, தனுசன், போஜன், நிரேஸ்வேந்தன், சங்கீத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2009) வெள்ளிக்கிழமை ந.ப 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயத்திரி கோட்டம்,
சிவன் கோயிலடி,
வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
திருமணிதேவி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வெற்றுவேட்டு அறிவிப்புகளை வெளியிடும் சர்வதேசத் தரப்புகள்

வன்னியில் மோதல் பிரதேசத்தில் நிலைமை மிக மோசமடைந்துள்ள கட்டத்தில், சூழலைச் சரிசெய்வதற்கு சர்வதேச சமூகம் எடுத்த எந்த முயற்சியுமே பலன் தரவில்லை. எல்லாமே விழலுக்கு இறைத்த நீராகிவிட்ட கட்டத்தில் பல்வேறு சர்வதேசத் தரப்புகளும் மாறி மாறி வெறும் அறிக்கைகளை வெளியிட்டு, வன்னியில் கொன்றொழிக்கப்படும் தமிழர்களுக்காக வெறுமனே நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லாதிக்க நாடுகள் கூட கொழும்பைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் - நீதியை நிலைநிறுத்த முடியாத கையறு சூழலில் - வெறுமனே கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் பல நூற்றுக்கணக்கில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க முடியாமல் - வெறுமனே பார்த்துக்கொண்டு வாளாவிருப்பதன் மூலம் - பெரும் வரலாற்றுக் குற்றத்தை இழைத்துக் கொண்டிருக்கின்றது சர்வதேசம்.

'பாதுகாப்பு வலயம்' மீது எந்நேரமும் பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம். இதனால் பெரும் இரத்தக்களரி அபாயம் உள்ளது. நிலைமை மிகமிக மோசமடையும் பேராபத்து ஏற்பட்டுள்ளது. கடந்த ஜனவரிக்குப் பின்னர் இப்படிப் படுகொலையுண்டோரின் எண்ணிக்கை ஏழாயிரத்தையும் தாண்டிவிட்டது. பொதுமக்கள் மீதான இவ்வாறான தாக்குதல்களுக்கு யார் காரணம் என்ற சர்ச்சையை முன்னிறுத்தியபடியே இக் கொடூரம் தொடர்கின்றது. எனவே, இச்சர்ச்சையைக் கருத்தில் கொண்டு மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு ஐ.நா. கண்காணிப்பாளர்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளை அனுமதிக்குமாறு பாதுகாப்புச் சபை வேண்டுகோள் விடுக்கவேண்டும்' - இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மனிதாபிமான அவலம் குறித்து ஐ.நா.பாதுகாப்புச்சபை உடனடியாக ஆராய வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நா.பாதுகாப்புச்சபையின் உத்தியோகபூர்வ அமர்விலும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் இலங்கை விவகாரம் விசேடமாக ஆராயப்பட வேண்டும் என அது வற்புறுத்துகின்றது.

ஆனால் இத்தகைய வற்புறுத்தல்கள், வலியுறுத்தல்கள், வேண்டுகோள்கள், கோரிக்கைகள் போன்றவை அங்கீகரிக்கப்பட்ட - தகுதியும் தகைமையும் உடைய - தரப்புகளால் முன் வைக்கப்படுகின்றன என்பதும், மிக அவசரமாகவும் அவசியமாக வும் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டிய விவகாரம் இது என்பதும் சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரியும். அது தெரிந்தும் - புரிந்தும் - கையாலாகாத நிலையில் வெறும் அறிக்கைகளை வெளியிட்டபடி அது பார்த்திருக்கின்றது.

இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் பிற ஐரோப்பிய நாடுகள் சிலவும் எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் இலங்கை விவகாரம் குறித்து விசேட அமர்வு ஒன்றை நடத்த மேற்கு நாடுகள் சில எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்திருப்பதாக இலங்கைத் தரப்பில் பெருமிதம் கூறப்படுகின்றது.

உலகின் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனும், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்டும் கூட மோசமடைந்து வரும் இலங்கை நிலைமை குறித்துக் கலந்துரையாடியிருக்கின்றார்கள். ஆனால் வன்னியில் நேர்ந்துள்ள பேராபத்து நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குத் தேவையான ஆக்கபூர்வ நடவடிக்கையை எடுக்க வக்கற்ற அவர்கள், திரும்பவும் ஒரு தடவை - வழமை போல - உடனடியாக மோதலை நிறுத்துமாறு வற்புறுத்தும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய அறிவிப்புகள், அறிக்கைகள் மற்றும் வெற்றுக் கோரிக்கைகளைக் கொழும்பு செவிமடுக்கப் போவதில்லை என்பதும், தனது போரியல் வெறிப்போக்கை அது இன்னும் தீவிரமாக முன்னெடுப்பதிலேயே முனைப்பாக உள்ளது என்பதும் இப்படி வெற்றும் வறிதானதுமான கோரிக்கைகளை வெளியிட்டுவரும் சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரியும்.

அப்படித் தெரிந்திருந்தும் கூட, தங்கள் கோரிக்கையை செவிமடுத்து உரிய வழியில் - நீதி, நியாயத்துடன் - செயற்பட கொழும்பு இணங்காவிட்டால், கடுமையான - தீவிரமான - பதிலடி நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்கவேண்டி நேரும் என்ற கடும் தொனியுடனான வற்புறுத்தல்களை சர்வதேச சமூகம் வெளியிடாமல், வெறும் மேம்போக்கான கோரிக்கைகளையே அது தொடர்ந்தும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

'நான் ஒப்புக்குச் சப்பாணியாக மோதலை நிறுத்தும்படி வற்புறுத்திக் கொண்டு இருக்கிறேன். நீ அதனை ஒரு காதால் வேண்டி மறுகாதால் வெளியிட்டபடி தமிழர்களைத் துடைத்தழிக்கும் உனது கைங்கரியத்தை உன்பாட்டில் செய்து கொண்டிரு!' எனக் கொழும்புடன் இரகசிய உடன்பாடு செய்துவிட்டுக் காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கின்றதோ சர்வதேச சமூகம் எனத் தமிழர்களும், சுயாதீன நோக்கர்களும் கருதும் அளவுக்கு இவ் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பற்ற - நழுவல், வழுவல் - போக்கு அமைந்திருக்கின்றது.

ஈராக் மீது தனது ஆக்கிரமிப்புப் போரை ஆரம்பிப்பதற்கு ஐ.நாவின் இணக்கத்துக்குப் பார்த்திருக்காத - காத்திருக்காத - அமெரிக்கா, இலங்கையில் மோசமடைந்துவரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தமிழர்களின் பேரழிவைத் தடுப்பதற்கு மட்டும் பாதுகாப்புச்சபை கூட்டத்துக்கும் அனுமதிக்கும் காத்திருப்பது போல நடிக்கின்றது. 'சர்வதேச பொலிஸ்காரனான' அமெரிக்காவின் வழியில் தானும் இப்படிப் 'பொறுப்புடன்' நடிப்பதாகக் காட்ட முயல்கின்றன சர்வதேச சமூகத்தின் ஏனைய அங்கத்துவத் தரப்புகள்.

சமாதானப் பேச்சுக் காலத்தில் அமைதி முயற்சிகளில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் சமதரப்பு அந்தஸ்துடன் பங்குபற்றியபோது, அவசரப்பட்டு, விரைந்து, புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துத் தடைசெய்து, அதன்மூலம் அமைதி எத்தனங்களில் புலிகளின் சமதரப்பு அந்தஸ்தை சிதறடித்து, அதன் வாயிலாக சமாதான எத்தனங்களுக்கே நிரந்தர ஆப்பு வைத்த சர்வதேச சமூகம், அப்போது புலிகளுக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுத்தமை போல இப்போது கொலைக் கொடூரத்தை அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் தரப்புகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பது ஏன் என்பதுதான் தமிழ் மக்களுக்குப் புரியவில்லை.

சர்வதேச சமூகத்தின் இந்த வெற்றுவேட்டு அறிக்கைகளும் கோரிக்கைகளும் பேரழிவுக்குள் சிக்குண்டிருக்கும் அப்பாவி ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற மாட்டா என்பதை இந்த சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். மனச்சாட்சியுடன் காரியமாற்ற அத்தரப்புகள் முன்வரவேண்டும். அப்போதுதான் பேரழிவின் இறுதியில் சிக்குண்டிருக்கும் எஞ்சிய தமிழர்களின் உயிர்களையாவது காப்பாற்ற வாய்ப்புக்கிட்டும்.

## வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் பயிற்சி

### புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 15

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு பயிற்சி நெறிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் மெடஸ்கஸ் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.



இதுவே நான் யாழ்.விஜயம் செய்தமைக்கான முக்கிய நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்று விஜயம் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ள இளைஞர், யுவதிகளில் நூறு பேர் முதற்கட்டமாக பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அனுசரணையுடன் இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக ஆங்கிலம், கணனி, பொது அறிவு போன்ற பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஆண், பெண் என இருபாலாருக்குமான பயிற்சிநெறிகளை வழங்குவதற்கு தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் இரண்டு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த நிலையங்களிலேயே இவர்களைத் தங்க வைத்து பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

முதற்கட்டப் பயிற்சிகள் நிறைவு பெற்றதும் 8 வகையான பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மரவேலை, ஒட்டுவேலை, மின் இணைப்பு, மோட்டார் திருத்துதல், மேசன், குழாய் பொருத்துநர், மரவேலைப் பயிற்சிகள் ஆகியன அதில் உள்ளடங்கும்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்குத் துரித நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார்.

புனர்வாழ்வு அமைச்சின் ஆணையாளர் யாழ்.திறந்த பல்கலைக்கழகம், முன்னர் பீலாலி வீதியில் அமைந்திருந்த உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டடங்கள் ஆகியவற்றை தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என். யோகராஜனுடன் சென்று பார்வையிட்டார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன், புனர்வாழ்வு அமைச்சின் ஆணையாளர் மெடஸ்கஸ் பெர்ணான்டோவிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ள இளைஞர், யுவதிகளுக்கான மறுவாழ்வுத் திட்டத்திற்கமைய பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது குடாநாட்டில் உள்ள சமயத் தலைவர்கள், பெரியோர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சாரம்சம் உள்ளடங்கிய மகஜர் அதுவாகும்.

குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் உயிர்ப்பாதுகாப்புக் கோரி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் தஞ்சம் அடைந்திருந்த ஒரு பிரிவு இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிநெறிகளை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(203-9)

## இலங்கையில் இடம்பெறும் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சிரத்தைகொள்ள வேண்டும்

### கோரிக்கை விடுக்கிறது நோர்வே

ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக நோர்வே குறிப்பிட்டுள்ளது.

படையினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலம் கண்டனத்திற் குரியதென நோர்வே சுட்டிக்காட்டியுள்ளது.

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் ஆகிய வற்றுடன் நோர்வே அரசாங்கம் இலங்கை நிலைவரம் குறித்து பேச்சு வா்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனியும் பொதுமக்கள் உயிரிழப்புகள் இடம்பெறக் கூடாதென்றால் உடனடியாக ஐக்கியநாடுகள் சபை இலங்கை விவகாரத்தில் காத்திரமான அழுத்தம் கொடுக்கப் பின்வாங்கக் கூடாது. யுத்த வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை அரசாங்கம் நிறுத்த வேண்டும். புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தக் கூடாது.

இலங்கையில் பெருக்கெடுத் தோடும் இரத்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த உலக சமூகம் விரைந்து செயற்பட வேண்டிய அவசிய தேவை எழுந்துள்ளது என்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்றுவரும் மனிதாபிமான அவலங்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் உடனடியாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் பேச்சுவார்த்தை நடத்தப் பட வேண்டும் என அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் ஜொனாஸ்கர் குறிப்பிட்டுள்ளார். (203)

## திருமறைக் கலாமன்றத்தின் ஒளி, ஒலி பதிவுக்கூடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 15

திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூதுக் கலையக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒளி, ஒலி பதிவுக்கூடத் திறப்புவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.புனிதசாள்ஸ் மகாவித்தியாலய ஆங்கில ஆசிரியர் திருமதி இ.ஞானப் பொன்ராஜா கலந்து கொண்டு ஒளி, ஒலி பதிவுக்கூடத்தைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன் கலந்துகொள்வார்.

வாழ்த்துரையை யாழ்.மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைய இயக்குநர் அருள்திரு.போல் றொஹான் அடிகள் வழங்குவார்.

(203)

## யுத்தம் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் நாட்டுக்குள் சர்வதேசப் படைகள் நுழையும்!

### எச்சரிக்கிறார் விக்கிரமபாகு கருணாரட்ண

கொழும்பு, மே 15

''உடனடியாக யுத்த நிறுத்தத்தை அரசு மேற்கொள்ளாவிட்டால் மனிதப் பேரவலத்தை முன்னிறுத்தி சர்வதேச படைகள் நாட்டுக்குள் நுழையும் நிலை ஏற்படும்.''

-இவ்வாறு இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அக்கட்சி நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து வெளியே வந்துள்ள இரண்டு லட்சம் பேர் சிறைக்கைதிகள் போன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் நிவாரணக் கிராமங்களிலேயே உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த நிவாரணக் கிராமங்களில் உள்ளவர்களுக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்தவர்களுக்கும் இடையே உள்ள ஆகக்குறைந்தபட்ச வேறுபாடு என்ன எனக் கேட்க விரும்புகிறேன்.

#### சுயாதீனமாகச் செய்தி சேகரிக்க அனுமதி இல்லை

இந்த இரண்டு லட்சம் பேருக்கும் தற்போது எவ்வாறு உணவு விநியோகிக்கப்படுகின்றது, மருந்து வழங்கப்படுகின்றது என்பது தொடர்பாக உண்மையான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. அரசால் ஏற்பாடு செய்யப்படும் ஊடகப் பயணங்களைத் தவிர சுயாதீனமான செய்தி சேகரிப்புக்கு அங்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக சில சுயாதீனத் தகவல்களை வெளியிட்டவர்களை அரசு நாடுகடத்தியுள்ளது. அன்றேல் அதுபோன்றவர்களை சிறையடைக்கின்றது. இதன் மூலம் இந்த முகாம்கள் சிறைக் கூடங்கள் என்பது தெளிவாகின்றன.



அவர்களுக்கு வெளியே வரமுடியாது. அவர்களைப் பார்வையிடவும் முடியாது. இது போன்றதுரதிஷ்ட நிலை இரண்டு லட்சம் பேருக்கு ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு உணவளிப்பதற்கு அரசினால் முடியுமா எனத் தெரியவில்லை. இது போன்ற மிக மோசமான நிலைமை காணப்படு கின்றது.

இந்நிலையில் அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சுகளின் பக்கம் திரும்பவேண்டும் என அழுத் திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அன்றேல் இந்த மனிதப் பேரவலத்தை முன்னிறுத்தி வெளிநாட்டுப் படைகள் பிரவேசிக்கும் சூழ்நிலை ஏற்படும். அப்படியான சந்தர்ப்பத்தில் நம் அனைவரதும் சுயாதீனத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும். அரசு இந்த சூழ்நிலையை உடனடியாக அகற்ற உரிய செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் - என்றார். (அ-சி)

### நாளை

| | |
|---|---|
| வைகாசி 02 | 16.05.2009 சனிக்கிழமை |
| திதி: | ஸப்தமி மு.இ.09.25வரை |
| நட்சத்திரம்: | திருவோணம் பி.ப.04.17 வரை |
| சுபநேரம்: | 02.53 - 04.23 |
| ராகுகாலம்: | 08.53 - 10.23 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத குடியேற்றப் படகு கவிழ்ந்து புளோரிடாவில் 10 பேர் பலி; 17 பேர் மீட்பு

புளோரிடா, மே 15

சட்ட விரோத குடியேற்றவாசிகள் பயணித்த படகொன்று தென் புளோரிடா கடற் பிராந்தியத்துக் கப்பால், கடலில் மூழ்கி விபத்துக் குள்ளானது. இதில் 10 பேர் பலியாயினர். 17 பேர் மீட்கப்பட்ட னர் என, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

''சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிக்கொண்டு வந்த படகு விபத்துக் குள்ளானதும், உடனடியாக மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஹெலிக் கொப்டர்களும் ஜெற் விமானமொன்றும், கப்பலொன்றும் மீட்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டன'' என, கரைப்பிராந்திய படை அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

''இப்படகில் 30 சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் வந்துள்ளார்கள். 17 பேர் மீட்கப்பட்டனர். 10 பேர் கடலில் மூழ்கி மரணித்துள்ளனர். மூவர் காணாமல் போய் உள்ளனர். மீட்புப்பணிகள் நீடிக்கின்றன'' என்றும் அவர் கூறினார்.

''இச்சட்ட விரோதக் குடி யேற்றவாசிகளில் பெரும்பாலானோர் ஹெய்ட்டிப் பிரஜைகளாவர். ஆண்டு தோறும் ஏறத்தாழ 1,500 ஹெய்ட்டி குடியேற்றவாசிகள் சட்ட விரோதமாக அமெரிக்காவில் குடியேறிவருகிறார்கள் உயிருக்கு உத்தரவாதமில்லாத படகுகளில்வரும் இவர்கள் அமெரிக்கக் கடற் பிராந்தியப் படையினரால் காப்பாற்றப்படுகிறார்கள்'' என்றும் அவர் கூறினார்.

''1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தான் பெருந்தொகையான ஹெய்ட்டி அகதிகள் வெளியேறியுள்ளார்கள். அவ்வருட ஆரம்பத்தில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டவிரோத ஹெய்ட்டி குடியேற்றவாசிகள் கடல் மார்க்கமாக வந்துள்ளார்கள்'' என ஓர் அதிகாரி கூறினார்.

''கொடிய வரட்சி, பஞ்சம், உள்நாட்டுக் கலவரங்கள் ஆகியவற்றால் ஹெய்ட்டிப் பிறஜைகள் வெளியேறுகிறார்கள், இவர்கள் பிரநாடுகளில் சட்ட விரோதமாக குடியேற்றுவதற்காக, பாதுகாப்பற்ற சிறிய படகுகளில் பெருந்தொகையினராக பயணிக்கிறார்கள். இதனால் அடிக்கடி விபத்துகளும், உயிரிழப்புகளும், சம்பவிக்கின்றன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வாஷிங்ரனில் விமான விபத்து; பயணிகள் பாதுகாப்பாக மீட்பு

வாஷிங்ரன் விமான நிலையத்தில் விபத்துக்குள்ளான விமானத்திலிருந்த பயணிகள் தக்க தருணத்தில் மீட்கப் பட்டார்கள், இதனால் உயிரிழப்பு தவிர்க்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள நியூ எலியன்ஸ் நகரிலிருந்து வாஷிங்ரன் வந்த[illegible]ந்த இப் பயணிகள் விமானம் தரை [illegible]றங்கும் போது, விபத்துக்குள்ளானது.

விமானத்தின் ஒரு ரயரில் பற்றிய தீ விமானத்திலும் பரவத் தொடங்கியது. இதையடுத்து உடனடியாக பயணிகள் அனைவரும் அவசர வழியாக வெளியே இறக்கப்பட்டனர். இதனால் பயணிகள் அனைவரும் தப்பினர்.

தீயணைப்பு படையினர் விரைந்து வந்து, தீயை அணைத்தனர். அதனால் சிறு சேதத்துடன் விமானமும் தப்பியது.

## 20ஆவது வருட பூர்த்தி விழாவுக்கு சீனா வந்த முன்னாள் தலைவர் கைது

பீஜிங், மே 15

சீன டினாமன் சதுக்கத்தில் இடம் பெற்ற மாணவர் போராட்டத்தின் 20 ஆவது வருட நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, நாடு திரும்பிய முன்னாள் மாணவர் தலைவர் ஷவ்யோங்ஜன் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

சீனாவில் 1989 ஆம் ஆண்டு, மாணவர்கள் ஜனநாயக உரிமை கோரி டினாமன் சதுக்கத்தில் போராட்டம் நடத்தினார்கள். இராணுவம் விரைந்து சென்று, இரும்புக் கரங் கொண்டு அவர்களை அடக்கியது. இதில் சில மாணவர்கள் பலியாயினர். பலர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் மாணவத்தலைவர் ஷவ் யோங்ஜனுமொருவர், இவர் சிறையில் அடைக்கப்பட்டார். அதன்பின்னர் 1993ஆம் ஆண்டு இவர் தப்பி அமெரிக்காவுக்கு ஓடி விட்டார். பின்னர் 1998 ஆம் ஆண்டு நாடுதிரும்பியதும் கைது செய்யப் பட்டார். எனினும் விடுதலையானார்.

இதன் பின்னர் அமெரிக்கா சென்ற இவர் 2002 ஆம் ஆண்டு நாடு திரும்பினார். மீண்டும் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார். இதையடுத்து அமெரிக்காவுக்குச் சென்ற இவர் 2008 ஆம் ஆண்டும் நாடு திரும்பினார். அப்போதும் கைது செய்யப்பட்டு விடுதலையானார்.

இதையடுத்தும் ஷவ் யோங்ஜன் அமெரிக்கா சென்று விட்டார். அமெரிக்கா செல்லல், நாடு திரும்புதல், கைதாகுதல், விடுதலையாகுதல், மீள அமெரிக்கா செல்லல் ஆகியவை இவரின் வாழ்க்கையில் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன.

டினாமன் சதுக்கத்தில் இடம் பெற்ற மாணவர் உரிமைப் போராட்டத்தின் 20 ஆவது வருட நிறைவு நிகழ்ச்சி, ஜூன் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் பங்கு பற்றுவதற்காக, அமெரிக்காவிலிருந்து ஷவ் யோங்ஜன் நாடு திரும்பினார். எனினும் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

''இவர் முன்னைய போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட வில்லை. நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமான செயல்களில் ஈடுபடுவார் எனக் கருதியும் கைது செய்யப்படவில்லை. மோசடி வழக்கு தொடர்பாகவே கைதாகியுள்ளார்'' என பொலிஸ் வட்டாரம் காரணம் கூறுகிறது.

## 33 நாடுகளில் பன்றிக் காய்ச்சல் பரவல்

கியூபா, பின்லாந்து, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் பன்றிகாய்ச்சல் நோய் பரவியுள்ளது. அதனால் உலகம் முழுவதும் இந்நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது என சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் ஐயாயிரத்து 728 பேர் பன்றி காய்ச்சல் நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் அமெரிக்காவில் அதிகபட்சமாக மூவாயிரத்து 9 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

பன்றிக் காய்ச்சல் உருவான மெக்ஸிகோவில் இதுவரை இரண்டாயிரத்து 59 பேரை இந்நோய் தாக்கியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 56 பேர் உயிரிழந்து விட்டனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## ஆப்கானில் கார்க் குண்டுத் தாக்குதல்: 7 பேர் உயிரிழப்பு; 27 பேர் காயம்

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பிராந்திய கோஸ்ட் நகரில் இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில், ஏழுபேர் கொல்லப் பட்டனர். 21 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 7 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

''அமெரிக்க இராணுவ முகாமிற்கு அருகே இக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது. இக்கோரத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது. கிழக்குப் பிராந்தியம் தலிபான்களின் கோட்டையாக உள்ளது'' என உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''இக்கார்க்குண்டுத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். 21 உள்ளூர் வாசிகள் காயமடைந்தார்கள். இவர்கள் வேலைக்குச் செல்வதற்காக, பஸ்களை எதிர்ப்பார்த்து காத்திருந்தவர்கள்'' என பக்ரம் பகுதியிலுள்ள அமெரிக்க இராணுவத்தள அதிகாரியொருவர் செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்தார்.

''இவர்கள் அனைவரும் கூலித் தொழிலாளர்கள். பஸ்களுக்காக, அமெரிக்க இராணுவமுகாமின் வாயிலுக்கருகில் காத்துக் கொண்டிருந்தவர்கள்'' என்றும் அவர் மேலும் விவரித்தார்.

# தலைமை நீதிபதியை தேர்வு செய்யும் அதிகாரத்தை நாடாளுமன்றத் தரப்பிடமிருந்து பறிக்க முயற்சி

### ரஷ்ய அதிபர் செயலகத்தின் மீது குற்றச்சாட்டு

ரஷ்யாவின் அதிகாரம் மிக்க நாடாளுமன்ற நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை தேர்வு செய்யும் அதிகாரத்தை, நாடாளுமன்ற நீதிபதிகளிடமிருந்து பறிப்பதற்கான நடவடிக்கையில் அந் நாட்டு அதிபர் அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

இது தற்போதைய பிரதமர் புடினை மீண்டும் அதிபர் பதவியில் அமரவைப்பதற்கான ரகசிய நடவடிக்கையாகும் என அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

தற்போது ரஷ்ய பிரதமராக உள்ள விளாடிமிர் புடின், மீண்டும் அதிபர் பதவிக்கு 2012 ஆம் ஆண்டு போட்டியிடலாம் எனக் கருதப்படுகிறது. இது சட்டப்படி செல்லும். ஆனால் அந்த காலகட்டத்திற்கு முன்னரே அவரை மீண்டும் அதிபர் பதவியில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகளில் அதிபர் அலுவலகம் ஈடுபட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக இங்கிலாந்தின் 'தி டெய்லி டெலிகிராப்' நாளிதழில் வெளியாகியுள்ள செய்தியில், அரசியல் சட்டத்திற்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கையையும் மாற்றி அமைக்கும் அதிகாரம் நாடாளுமன்ற தலைமை நீதிபதிக்கு வழங்கப் பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் உள்ள 19 நீதிபதிகள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தலைமை நீதிபதியைத் தேர்வு செய்யும் முறை அமுலில் உள்ளது.

இந்த அதிகாரத்தை நாடாளுமன்ற நீதிபதிகளிடமிருந்து பறிக்கும் நடவடிக்கையில் ரஷ்யா அதிபர் அலுவலகமான கிரெம்லின் ஈடுபட்டுள்ளது என அதில் கூறப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற தலைமை நீதிபதியை தேர்வு செய்யும் உரிமை அதிபருக்கு கிடைப்பதன் காரணமாக, புடினுக்கு நெருக்கமானவர்கள் நாடாளுமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று கூறப்படுகின்றது.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழப்பாணம், மே 15

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பிரிவினால் கணனிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதியும் கௌரவ விருந்தினர்களாக செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கமும், சண்டிலிப்பாய் கல்வித் கோ[illegible]ப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (1-9)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர்



கொக்குவில் மேற்கு, அப்பையா லேனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர் நேற்று(14.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற பொன்னையா-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவானந்தன், சிவநேசன் (கனடா), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவதாசன், சிவசக்தி, சிவமலர், சிவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஷீலா (கனடா), மா.இளம்பிறையன் (யாழ். பல்கலைக்கழகம்), ம.முருகதாஸ் (கினெஸ் எஸ்ரேட், அவிசாவளை), ஜெயசுதா (கனடா), தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், பராசக்தி, காலஞ் சென்ற பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், லெனின், ஒல்கா, பிரியங்கா, ராகுல், பானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகரத்தினம், வில்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலகுமரன், பாலரஞ்சன், பாலமுரளிதரன், பாலமுகுந்தன் ஆகியோரின் அன்பு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (17.05.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அப்பையா லேன்,*
*கொக்குவில் மேற்கு*
T.P *4591806*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அப்பாக்குட்டி முருகேசு

மீசாலை மேற்கைச்சேர்ந்த அப்பாக்குட்டி முருகேசு நேற்று (14.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும்,செல்வராணியின் அன்புக் கணவரும், திலகராணி,ரேவதி, ரமணகுமாரி, விஜயகுமார், கீதா, ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன், ரவீந்தி ரன், பிரதீஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், சகீனா, வர்ஷா, ஆதித்தியா, அபியுக்தா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நாகலிங்கம் நாகம்மா



சுன்னாகம் மயிலணியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் நாகம்மா நேற்று (14.05.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவபாக்கியம் (அமரர்), மற்றும் சித்திராதேவி, இராஜேஸ்வரி, சசிகரன் (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் விசுவலிங்கம், வடிவேலு, பாலச்சந்திரன், சாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாணிக்கம் (அமரர்), பூரணம், ருக்குமணி (அம ரர்), சுந்தரலிங்கம், பாலசிங்கம், மகாலிங்கம், வீரசிங்கம், தருமலிங்கம் (அமரர்), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜி, சோபிதா, தனு (லண்டன்), சாரு, வித்தியா (கனடா), சருவா, விஜிதரன் (பிரான்ஸ்), சானுகா (சுவிஸ்), சரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றிதேஸ், றிசா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2009) வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சீரணி மணிமண்டபத் திறப்பு விழாஅண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். மானிப்பாய் பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் மண்டபத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: சரவணன்)*

# யாழ்.மாவட்டத்தில் உள்ள கூ.சங்கங்களில் கோதுமை மா, சீனி இரண்டுமே இல்லை

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.மாவட்டத்தில் உள்ள அநேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அத்தியாவசியப் பொருள்களான சீனி மற்றும் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வலிகாமம், வலி.கிழக்கு, வடமராட்சி போன்ற சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இவற்றின் கையிருப்பு முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சீனியும் மாவும் ஒரேசமயத்தில் சங்கங்களில் தீர்ந்துள்ளதால் பாவனையாளர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதேசமயம் தனியார் கடைகளில் அவற்றின் விலைகள் கிடு கிடுவென எகிறிச் செல்கின்றன.

சீனி கிலோ 90 ரூபாவுக்கு மேலும் மா கிலோ 80 ரூபாவுக்கு அதிகமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

கூட்டுறவுக் கடைகளில் திடீரென ஏற்பட்ட இந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதன் மூலமே மக்களின் அன்றாட அசௌகரியங்களைப் போக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொருள்கள் கப்பல்மூலம் எடுத்துவரப்படாமையே இந்தத் தட்டுப்பாட்டுக்கு காரணம் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (203-224)

## நீர்வேலிப் பகுதியில் இரண்டு கோப் சிற்றிகள்

யாழ்ப்பாணம்,மே15

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேலும் இரண்டு மினி கோப் சிற்றிகளைத் திறந்துவைக்கவுள்ளது.

சங்கத்தின் தலைவர் என்.சுந்தரலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இருபாலைச் சந்தி மற்றும் ஊரெழு பிள்ளையார் கோயிலடி ஆகிய பகுதிகளில் இந்த இரண்டு மினி கோப்சிற்றிகளும் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளன.

இதேசமயம் - ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் கிராமப்புறங்களில் குறைந்தது மூன்று மினி கோப் சிற்றிகளைத் திறந்துவைக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (203-224)

## அறவழி உற்பத்தியகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மே15

அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் அறவழி உற்பத்தியகம் திறப்பு விழா எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அறவழி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (203-204)

## மானிப்பாய் பொதுநூலகத்தில் கவிதை, கட்டுரைப் போட்டிகள்

ஆனைக்கோட்டை,மே15

தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் பட்டின சபையின் பொதுநூலகத்தினரால் கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபையினால் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவிருப்பதாக மானிப்பாய் பொது நூலகர் திருமதி லோகேஸ்வரி நித்தியானந்தன் தெரிவித்தார்.

இப்போட்டிகள் தொடர்பான மேலதிகமான விவரங்களைத் தம்முடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 30ஆம் திகதி இதற்கான முடிவுதிகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (203-20)

## உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மே மாதத்திற்கான நிவாரணம் வழங்க ஏற்பாடு

### செயலகத்தால் வழங்கற் கட்டளைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,மே15

உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மே மாதத்திற்கான இலவச நிவாரண விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்த விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகளை யாழ்.செயலக புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பெற்று பொருள்களைக் களஞ்சியத்தில் இருந்து உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

மே மாதத்திற்கான விநியோக நடவடிக்கைகளை விநியோக அட்டவணையின் பிரகாரம் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

தரமான பொருள்கள் சரியான பயனாளிகளுக்குச் சென்றடைவதையும் உரிய காலத்தில் நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படுவதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

| *பொருள்* | *விலை* | *01M* | *02M* | *03M* | *04M* | *05M* |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 58.50 (Kg) | 2.775 | 5.775 | 6.825 | 8.300 | 11.200 |
| மா | 59.20 (Kg) | 1.000 | 2.000 | 4.000 | 4.000 | 5.000 |
| சீனி | 73.67 (Kg) | 1.000 | 1.500 | 2.000 | 3.000 | 3.200 |
| பருப்பு | 161.50 (Kg) | 0.250 | 0.300 | 0.350 | 0.400 | 0.450 |

### நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கென

## இந்து ஆலயங்களின் சார்பில் பணமும் பொருள்களும் வழங்கப்பட்டன

நல்லூர்,மே15

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகளுக்காக இந்து ஆலயங்களின் சார்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை 3 லட்சத்து 43ஆயிரம் ரூபா பணமும் 63 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் இந்து அமைப்புக்கள் ஒன்றியத்திடம் வழங்கப்பட்டன.

நல்லை ஆதீனத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம் 2லட்சத்து 83 ஆயிரம் ரூபாவும், உயரப்புலம் உத்துங்க விநாயகர் தேவஸ்தானம் 60 ஆயிரம் ரூபாவும், மருதனார்மடம் ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தினர் குழந்தைகளுக்குரிய 63ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் வழங்கினர்.

இந்தநிகழ்வில் இந்து அமைப்புக்கள் ஒன்றியத்தின் உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பொருளாளர் சி.வி.கே. சிவஞானம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (203-111)




## காரைநகர் தியாகராஜா ம.வியில் குருதிக் கொடையாளர் கழகம்

ஆனைக்கோட்டை,மே15

குடாநாட்டுப் பாடசாலை மட்டத்தில் முதற்தடவையாக குருதிக் கொடையாளர் கழகமானது காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மாணவர்களுக்கிடையே இரத்ததானம் வழங்குவது தொடர்பான விழிப்புணர்வைக் கட்டியெழுப்புவதே இக்கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் நோக்கமென இக் கல்லூரியின் அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தெரிவித்தார்.

பாடசாலை மட்டத்தில் குருதிக் கொடையாளர் கழகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது தொடர்பாக யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவசங்கர் கருத்துத் தெரிவிக்கும்போது இம்முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கதென்றும், பாடசாலை மட்டத்தில் இது சிறப்பான முன் உதாரணமாகத் திகழ்வதென்றும், ஏனைய பாடசாலைகளும் இதனைப் பின்பற்றவேண்டுமெனவும் கூறினார். (203-20)

## உதவிப் பணம் பெறுவோருக்கு உணவுப் பொருள்கள்

நல்லூர்,மே15

வேலணை பிரதேச செயலகப் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறும் சுமார் ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு டென்மார்க் அகதி நிறுவனம் கருவாடு, மரக்கறி எண்ணெய் உட்பட ஏனைய சில்லறைப் பொருள்கள் கொண்ட உணவுப் பொதிகளை வழங்கவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமையும், 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் வேலணைப் பகுதியிலும் 22ஆம் திகதி நயினாதீவு பிரதேச சபை அலுவலகத்திலும் வைத்து குறிப்பிட்ட பொதிகள் வழங்கப்படவுள்ளன.

புங்குடுதீவு சர்வோதய அலுவலகத்தில் வைத்து நேற்று வியாழக்கிழமை ஒரு பகுதியினருக்கு இவை வழங்கப்பட்டதுடன் இன்று வெள்ளிக்கிழமையும் வழங்கப்படவுள்ளது.

ஒரு நபருக்கு 2 பொதிகள் வீதம் வழங்கப்படவுள்ளதாக வேலணை சமூகசேவை உத்தியோகத்தர் வெ.சிவராசா அறிவித்தார். (203-111)



'ஜீவநதி' மலரின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தேவரையாளி இந்துக் கல்லூரியில் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலாபூஷணம் தெணியான், கல்லூரி அதிபர் ம.நவநீதமணி ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் எஸ்.ராஜேஸ்கண்ணா வெளியிட்டுவைக்க லயன் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்தில் காணலாம். ஜீவநதியின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரனும் படத்தில் காணப்படுகிறார். நேற்றைய உதயனில் வெளியான படத்தில் சிலரின் பெயர்கள் தவறுதலாகப் பிரசுரமாகி விட்டன. *(படங்கள்: லிங்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு வவுனியா முகாம்களுக்கு விஜயம்

கொழும்பு, மே 15

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் காலை வவுனியா நலன்புரி முகாம்களுக் கான விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இலங்கைக்கு இரண்டு நாள்கள் உத் தியோக பூர்வ விஜயத்தினை மேற் கொண் டுள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி களுள், அதன் தற்போ தைய தலைவரும் செக்குடியரசின் பிரதிநிதியும் அந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர் காலத்தில் தலைமைத்துவத்தை ஏற்கவுள்ள சுவீடன் நாட்டின் பிரதிநிதி, அதன் ஆணைக்குழு வின் பிரதிநிதி மற்றும் செயலர், அலுவலகப் பிரதிநிதிக ளும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அவர்கள் வெளிவிவா கர அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம மற்றும் வெளியுறவுச் செயலர் பாலித்த கோஹன ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் பிரச் சினைகள் குறித்து இவர்கள் கலந்துரை யா டினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்வதற்கு ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் கூட்டம்

கொழும்பு, மே 15

இலங்கையில் மோசமடைந்து வரும் நிலைமை குறித்து ஆராய்வதற்கென ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் அடுத்த வாரம் அவசரக் கூட்டம் ஒன்று நடத்துவ தற்கு ஏற்பாடாகியுள்ளது.

47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் 16 நாடுகள் ஆதரிக்கும் பட்சத்தில் இந்தக் கூட்டம் அடுத்த வாரம் நடைபெறும் எனவும் – 15 நாடுகள் இதற்கு சம்மதம் தெரிவித் துள்ள நிலையில், உக்ரைன் நாட்டின் சம்மதத்தைப் பெறு வதற்கான முயற் சி கள் நடைபெறு கின் றன எனவும் ஐரோப் பிய ஒன்றியத்தின் இராஜதந்திரிகள்தெரி வித்தனர். (அ-சி)

# போரினால் வன்னிப் பகுதிச் சிறுவர்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்

## ராதிகா குமாரசுவாமி கவலை

கொழும்பு, மே 15

''அரச படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக வன்னிப் பகுதியிலுள்ள சிறுவர்கள் கடு மையான பாதிப்புகளை எதிர் நோக்கி வரு கின்றனர்'' •

– இவ்வாறு ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் சிறுவர் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கான விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி கவலை தெரிவித் துள்ளார்.

யுத்தம் காரணமாக அப்பாவிச் சிறுவர் கள் சொல்லொணா துயரங்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும், இது ஓர் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை பணயமாக வைக்கவோ அல்லது ஆயுத போராட்டத்தில் ஈடுபடுத் தவோ எவருக்கும் அதிகாரமில்லை என அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென வும், அவர்கள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் சேர்க்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான சிறுவர்கள் உயிரிழந்தும், கடுமையான காயங்க ளுக்கு உள்ளாகியும் பாதிக்கப்பட்டுள் ளனர் என சுட்டிகாட்டியுள்ள அவர்,

அரச அகதி முகாம்களில் தங்க வைக் கப்பட்டுள்ள சிறுவர்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்ற னர் எனவும், சர்வதேச தர நியமங்களுக்கு அமைவான வசதிகள் அகதி முகாம்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஷெல் தாக்குதல்களை நடத்தக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்த வலய சிறுவர்களது நிலைமை கள் குறித்து ஆய்வு மதிப்பீடுகளை மேற்கொள்ள விசேட பிரதிநிதியொரு வரை அனுப்பி வைப்பது குறித்து ராதிகா குமாரசுவாமி தற்போது அரசுடன் பேச்சுகளை நடத்தி வருகிறார் எனவும் தெரியவருகிறது. (சி)


## விற்பனைக்கு

முதலீட்டுக்கான அரிய ஒரு சந்தர்ப்பம்

யாழ்நகர், யாழ்ப்பாணம்

மதிப்பீட்டு இல. 55, 157 மானிப்பாய் வீதியில் தற்போது சமுர்த்தி வங்கி அமைந்துள்ள ஆதனம் (சிவன்கோயிலை அண்மித்துள்ளது)

காணியின் விஸ்தீரணம்: - 2 பரப்பு அண்ணளவாக

கட்டடவிபரம்- காட்சி அறை 1300 ச.அடி

இரண்டு மாடிக்கட்டடம்-2900 ச.அடி

மேலதிக விவரங்களுக்கு:

INQUIRIES - CALL D.G. NEWTON
PHONE - 5444420 / 21-ETN 410
FAX - 5364295

(சி/558373)


## அச்சுவேலி வைத்தியசாலையில் அம்புலன்ஸ் நிறுத்தத் தரிப்பிடம்

வடமராட்சி, மே 15

அச்சுவேலிப் பிரதேச அரசினர் வைத்திய சாலையில் அம்புலன்ஸ் வண்டி நிறுத்த தரிப்பிடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

வைத்தியசாலை வளாகத்தில் பற்சிகிச் சைப் பிரிவுக்கு அருகில் மாகாண சுகா தாரத் திணைக்களத்தினால் 2 மில்லியன் ரூபா செலவில் கடந்த வருடம் இக் கட்ட டத்திற்கான கட்டட வேலைகள் ஆரம்ப மாகின.

இவ்வாண்டுக்குள் இக்கட்டட வேலை கள் பூர்த்தியடையுமென யாழ். பிராந்தி சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள் ளது. (203-236)


## காணி விற்பனை

யாழ்நகர், இல. 11/1, மகாத்மா காந்தி வீதியில் (Clock Tower Road) அமைந்துள்ள காணித்துண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் (யாழ். கூட்டுறவுச்சங்க ஆதனத்தின் அருகில்) 6 ½ பரப்பு (44 பேர்ச்) (அண்ணளவாக) வங்கி, காட்சி அறை, கடைத் தொகு திக்கு, தனியார் கிளினிக் என்பவற்றுக்கு உகந்தது மேலதிக விவரங்களுக்கு:

*INQUIRIES:* CALL - D.G.NEWTON

*PHONE:* 5444420/21-ETN 410

(C/558372) FAX: 5364295

## விற்பனைக்கு

நகைக்கடை ஒன்றுக்குத் தேவையான மரத்தினாலான காட்சி அலுமாரி (சோக்கேஸ்) உடன் விற்பனைக்குண்டு.

(85312) தொடர்பு: 0777111123

## டிஜிற்றல் பிறின்ட்

90 ரூபாயில் இருந்து



★ இல-212,கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
★ இல-40,பிரவுண் வீதி, நீராவியடி.

T.P -0718270396, 0777110610, 0212229607


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 12 ★ 09 ★ 1927



விண்ணுலகில் 27 ★ 05 ★ 2008

திருமதி

### குணரத்தினம் அன்னலட்சுமி

திதி: ஷஷ்டி

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து ஆசை மொழியூட்டி
மன்னு புகழ் கீர்த்தியுடன் வாழ வைத்த தெய்வமே!
பாசமுடன் இணைந்த இனிய உங்கள் முகம்
எங்கள் நெஞ்சோடு வாழுமம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கு.பாலசுப்பிரமணியம் (மகன்),
பிள்ளையார் ரான்ஸ்போட்,
சங்கானை.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(C/558557)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மனம் மகிழ 25.05.1946

மனம் நெகிழ 15.04.2009

### அமரர் பொன்னுத்துரை மகாதேவன் (செல்லு)

மனைவி, மக்களின் உறவைப்பேணி
எங்கள் சொத்தாக இருந்தீர் - நித்திலத்தில்
வித்தாகிப் போனாலின்றும் எம்மனதில்
விருட்சமாக வாழ்வீர் வேறென்றி


இன்று (15.05.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல் லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

டச்றோட்,
சித்தன்கேணி. (85246) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு காங்கேசன்

(முன்னாள் உரிமையாளர், இரத்தினம் லைட், கன்னா லொறி)



கோப்பாயைப் பிறப்பிடமாவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு காங்கேசன் 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறை பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான கதிரவேலு- நல்லம்மா தம்ப தியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற பொன்னம்பலம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தனஜோதியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, காலஞ் சென்ற அப்பாத்துரை (அப்பா அண்ணை) மற்றும் Dr.லோகேஸ் வரி, சந்திரசேகரம், யோகேந்திரன் ஆகியோரின் சகோதரனும் தயாளன், கஜானந்தன், கார்த்திகா, கிருஷ்ணிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோஜனின் மாமனும் ஆதியனின் பேரனும் சுப்பிரமணியம், சிவபாத சுந்தரம், அமிர்தாம்பிகை, கமலா, விஜயலட்சுமி, குணசேகரம், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(16.05.2009) சனிக்கிழமை றொறன்றோ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி, (85305) தகவல்: அ.செந்தூரன் (பேறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- " அன்பினால் உலகையே வெல்ல முடியும் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

உச்சரிப்பு சரியாக அமைவதற்கு சொற்களின் உச்சரிப்பை பிரிப்பதை (Syllable) என அழைப்பர். அதற்கிணங்க முக்கியமான சொற் களை கீழே காணலாம். இவை Day to Day Conversation நாளாந்த பாவனை வாக்கியங்களில் வரும். இவற்றைப் பலமுறை படித்து பழக்கப்படுத்திக்கொள்ளவும்.

**01.05.2009 Continuity.....**

| | சொற்கள் | பிரிப்பு | உச்சரிப்பு | கருத்து |
|---|---|---|---|---|
| 185. | Ethics | Eth - ics | எதிக்ஸ் | ஒழுக்கவியல் |
| 186. | Ethnic | Eth - nic | எத்னிக் | இனத்துக்குரிய |
| 187. | European | Eu - ro - pe - an | யூரோப்பியன் | ஐரோப்பியர் |
| 188. | Evacuate | E - vac - u - ate | எவகேட் | வெளியேற்று |
| 189. | Everybody | Eve - ry - bo - dy | எவிரிபொடி | அனைவரும் |
| 190. | Evidence | Ev - i - dence | எவிடன்ஸ் | சாட்சி |
| 191. | Examination | Ex-am -i -na - tion | எக்ஸ்சமேசன் | பரீட்சை |
| 192. | Excellency | Ex- cel -len - cy | எக்சிலன்சி | தூதுவர் |
| 193. | Excellent | Ex - cel - lent | எக்சிலன்ட் | மிகச்சிறந்த |
| 194. | Excitement | Ex - cite - ment | எக்ஸ்சயிட்மென்ட் | மனக்கிளர்ச்சி |
| 195. | Exempt | Ex - empt | எக்ஸ்எம்ட் | விலக்களி |
| 196. | Exhibition | Ex - hi - bi - tion | எக்சிபிஷன் | பார்வைக்கு வைத்தல் |
| 197. | Expectation | Ex - pec - ta - tion | எக்ஸ்பேக்ஷன் | எதிர்பார்த்திருத்தல் |
| 198. | Experience | Ex - pe - ri - ence | எக்ஸ்பிரியன்ஸ் | அனுபவ அறிவு |
| 199. | Experiment | Ex - per- i- ment | எக்ஸ்பெரிமென்ட் | சோதனைசெய்தல் |
| 200. | Expertise | Ex - per - tise | எக்ஸ்பேட்டிஸ் | சிறப்பறிவுத் தன்மை |
| 201. | Explain | Ex - plain | எக்ஸ்பிளையின் | விரித்துரை |
| 202. | Explanation | Ex - pla- na- tion | எக்ஸ்பிளனேசன் | விளக்கம் |
| 203. | Expression | Ex - pres - sion | எக்ஸ்பிரசன் | விளக்கமாகச்சொல்லுதல் |
| 204. | Expressive | Ex - pres - sive | எக்ஸ்பிரசிவ் | சொல்திறம் கொண்ட |
| 205. | Exposition | Ex - po - si - tion | எக்ஸ்பொசிசன் | விளக்குதல் |
| 206. | Extension | Ex - ten - sion | எக்ஸ்ரென்ஷன் | நீட்டுதல் |
| 207 | Fabricate | Fab - ri - cate | பபரிகேட் | உருவாக்கு |
| 208. | Factory | Fac -to - ry | பக்றி | தொழிற்சாலை |
| 209. | Faculty | Fac - ul - ty | பக்கல்டி | பல்கலைக்கழகப் பகுதி |
| 210. | Failure | Fail - ure | பெயில்யர் | தோல்வி |
| 211. | Faithful | Faith - ful | பெயித்புல் | நம்பிக்கைக்குரிய |
| 212. | Familiar | Fa - mil - ilar | பமில்யர் | பழக்கமாக |
| 213. | Farmer | Farm - er | பாமர் | விவசாயி |
| 214. | Favour | Fa - vour | பேவர் | விரும்பு |
| 215. | Fertilise | Fer - ti - lise | பேட்டிலைஸ் | செழுமையாக்கு |
| 216. | Finalize | Fi - nal - ize | பைனலைஸ் | முடிவுக்குகொண் ுவா |
| 217. | Forfeit | For - feit | பொபிற் | இழுத்துவிடு |
| 218. | Forgive | For - give | போர்கிவ் | மன்னித்துவிடு |
| 219. | Fortunate | For - tu - nate | போர்ச்சுனேட் | நற்பேறுடைய |
| 220. | Forward | For - ward | போர்வேட் | முன்னோக்கு |
| 221. | Foundation | Foun - da - tion | பவுன்டேஷன் | அஸ்திவாரம் |
| 222. | Fragrance | Fra - grance | பிறேகிறன்ஸ் | நறுமணம் |
| 223. | Freedom | Free - dom | பிறீடம் | சுதந்திரம் |
| 224. | Frequent | Fre - quent | பிறிகுவென்ட் | அடிக்கடி |
| 225. | Friendship | Friend - ship | பிறன்ட்சிப் | நட்பான |
| 226. | Frighten | Fright - en | பிரிட்டின் | அச்சமூட்டு |
| 227. | Fundamental | Fun- da- men -tal | பண்டமென்ரல் | அடிப்படையான |
| 228. | Funeral | Fu - ner - al | பியுனரல் | ஈமச்சடங்கு |
| 229. | Furniture | Fur - ni - ture | பேனிச்சர் | தளபாடம் |
| 230. | Further | Fur - ther | பேதர் | மேலும் |
| 231. | Future | Fu - ture | பியூச்சர் | எதிர்காலம் |
| 232. | Gamble | Gam - ble | கம்பிள் | சூதாட்டம் |
| 233. | Garden | Gar - den | கார்டின் | தோட்டம் |
| 234. | Garlic | Gar - lic | கார்லிக் | வெள்ளைப்பூண்டு |
| 235. | Garment | Gar - ment | கார்மென்ட் | ஆடை |
| 236. | Gathering | Gath - er - ing | கெதரிங் | கூட்டம் |
| 237. | Gazette | Ga - zette | கசெட் | அரசினர்செய்தியறிக்கை |
| 238. | General | Gen - er - al | ஜெனரல் | பொதுவான |
| 239. | Generalize | Gen - er - a -lize | ஜெனரலைஸ் | பொதுவிதி உண்டாக்கு |
| 240. | Generally | Gen - er - al - ly | ஜெனரலி | பொதுவாக |
| 241. | Genuine | Gen - u - ine | ஜெனுஇன் | உண்மையான |
| 242. | Girlish | Girl - ish | கேளிஷ் | சிறு பெண் சார்ந்த |
| 243. | Global | Glob - al | குளோபல் | கோளவடிவமான |
| 244. | Glossary | Glos - sa - ry | குளொசரி | அருஞ்சொல் விளக்கத் தொகுதி |
| 245. | Godfather | God - father | கொட்பாதர் | ஞானத் தந்தை |
| 246. | Government | Gov - ern - ment | கவன்மென்ட் | அரசாங்கம் |
| 247. | Graceful | Grace - ful | கிறேஸ்புல் | அருள் உள்ளம் சார்ந்த |
| 248. | Graduate | Grad - u - ate | கிறாஜுஅட் | பட்டதாரியாகு |
| 249. | Grammatical | Gram - mat - i - cal | கிறமட்றிக்கல் | மொழியின் இலக்கணம் சார்ந்த |
| 250. | Gratify | Grat - i - fy | கிறாட்டிபை | மனநிறைவு உண்டாக்கு |
| 251. | Gratitude | Grat - i - tude | கிறட்டிடியூட் | நன்றி |
| 252. | Greeting | Greet - ing | கிறீட்டிங் | பாராட்டு |
| 253. | Guarantee | Guar - an - tee | கரண்டி | உத்தரவாதம் |
| 254. | Guardian | Guard - ian | காடியன் | பாதுகாவலர் |
| 255. | Guess | Guess | கெஸ் | அனுமானி |
| 256. | Guitar | Gui - tar | கிட்டார் | இசைக்கருவி |
| 257. | Habitation | Hab - i - ta - tion | ஹபிரேஷன் | வாழும் இடம் |
| 258. | Habituate | Ha - bit - u - ate | ஹபிச்சுஅட் | பழக்கப்படுத்திக்கொள் |
| 259. | Hallmark | Hall - mark | கோல்மார்க் | தரக்குறியீடு |
| 260. | Handsome | Hand - some | ஹான்ட் - சம் | அழகான |
| 261. | Happen | Hap - pen | ஹப்பன் | இடம்பெறு |
| 262. | Harass | Har - ass | ஹரஸ் | தொல்லைகொடு |
| 263. | Harbour | Har - bour | ஹாபர் | துறைமுகம் |
| 264. | Hardly | Hard - ly | ஹாட்லி | அரிதாக |
| 265. | Harvest | Har - vest | ஹாவஸ்ற் | அறுவடை |
| 266. | Heartily | Heart - i - ly | ஹிட்டிலி | மனம் உவந்து |
| 267. | Helpless | Help - less | ஹெல்ப்லெஸ் | உதவியற்ற |
| 268. | Hesitate | Hes - i - tate | ஹெசிட்டேட் | தயங்கு |
| 269. | Historical | His - tor - i - cal | ஹிஸ்டொறிக்கல் | வரலாற்றுத் தொடர்புள்ள |
| 270. | Hobby | Hob - by | ஹொபி | பொழுதுபோக்கு |
| 271. | Honest | Hon - est | ஒனிஸ்ட் | நேர்மையான |
| 272. | Honourable | Hon - our - a - ble | ஒனரபிள் | பெருமைமிகுந்த |
| 273. | Hopeful | Hope - ful | ஹோப்புல் | நம்பிக்கையுடைய |
| 274. | Horrible | Hor - ri - ble | ஹொறிபிள் | பயங்கரமான |
| 275. | Hospitality | Hos - pi - tal - i - ty | ஹொஸ்பிற்றலிட்டி | விருந்தோம்பும் பண்பு |
| 276. | Humanity | Hu - man - i - ty | ஹியூமானிட்டி | மனித இனம் |
| 277. | Humility | Hu - mil - i - ty | ஹியூமிலிட்டி | பணிவு |
| 278. | Hungry | Hun - gry | ஹங்கிறி | பசியுள்ள |
| 279. | Hunter | Hun - ter | ஹன்டர் | வேட்டைக்காரன் |
| 280. | Hurry | Hur - ry | ஹறி | வேகமாகு |
| 281. | Husband | Hus - band | ஹஸ்பன்ட் | கணவன் |
| 282. | Hyper | Hyper | ஹைபர் | அதிகமான |
| 283. | Idea | I - de - a | ஐடியா | யோசனை |
| 284. | Ideal | I - deal | ஐடியல் | நிறைவாகச் சிறந்தது |
| 285. | Identical | I - den - ti - cal | ஐடென்டிக்கல் | முழுவதும் ஒத்த |
| 286. | Identify | I - den - ti - fy | ஐடென்ரிபை | அடையாளம் நிரூபி |
| 287. | Idiom | Id - i - om | இடியம் | மொழிமரபு |
| 288. | Ignorance | Ig - no - rance | இக்நொரன்ஸ் | அறியாமை |
| 289. | Illegal | Il - le - gal | இலிகல் | சட்டத்திற்குப் புறம்பான |
| 290. | Image | Im - age | இமிஜ் | ஒப்புவமை |
| 291. | Imagination | I - mag - i - na - tion | இமெஜிநேசன் | கற்பனைத்திறன் |
| 292. | Imitate | Im - i - tate | இமிடேட் | போலிசெய் |
| 293. | Immeasurable | Im - meas - ur - a - ble | இமெஷரபிள் | அளவிடமுடியாத |
| 294. | Immediate | Im - me - diate | இமிடியட் | மிக நெருங்கிய |
| 295. | Immigrant | Im - mi - grant | இமிகிறன்ட் | குடிபுகுபவர் |
| 296. | Immoral | Im - mor - al | இம்மோறல் | ஒழுக்கமற்ற |
| 297. | Immovable | Im - mo - va - ble | இம்மூவெபிள் | இடம்பெயர்க்கமுடியாத |
| 298. | Impactful | Im - pact - ful | இம்பக்ட்புல் | விளைவுமிக்க |
| 299. | Importance | Im - por - tance | இம்போட்டன்ஸ் | முக்கியத்துவம் |
| 300. | Impracticable | Im - prac - ti - ca - ble | இம்பிறற்றிகபில் | செயல்படுத்த முடியாத |
| 301. | Impregnate | Im - preg - nate | இம்பிறெக்னேட் | கருவுறச்செய் |
| 302. | Improbable | Im - prob - a - ble | இம்புறப்பபிள் | இயற்கையாக நிகழமுடியாத |
| 303. | Inability | In - a - bil - i - ty | இன்னெபிலிட்டி | பலமின்மை |
| 304. | Inactive | In - ac - tive | இன்னக்ரிவ் | செயலற்ற |
| 305. | Inapplicable | In - ap - pli - ca - ble | இன்னப்பிளிக்கபிள் | பொருத்தமற்ற |
| 306. | Inartificial | In - ar - ti - fi - cial | இன்னாட்டிபிசல் | இயற்கையான |
| 307. | Inaugurate | In - au - gu - ra - te | இனொகுறேட் | தொடக்கிவை |
| 308. | Incalculable | In - cal - cu - la - ble | இன்கல்குலபிள் | மதிப்பிடமுடியாத |
| 309. | Incapable | In - ca - pa - ble | இன்கேப்பபிள் | திறமையற்ற |
| 310. | Incident | In - ci - dent | இன்சிடன்ட் | நிகழ்ச்சி |
| 311. | Inclusive | In - clu - sive | இன்குளுசிவ் | உள் அடக்கிய |
| 312. | Incomplete | In - com - plete | இன்கொம்பிளிட் | பூர்த்திபெறாத |
| 313. | Increase | In - crease | இன்கிறீஸ் | அதிகரி |
| 314. | Incredible | In - cred - i -ble | இன்கிறெடிபிள் | நம்பமுடியாத |
| 315. | Increment | In - cre - ment | இன்கிறிமென்ட் | சம்பள உயர்வு |
| 316. | Indefinite | In - def - i - nite | இன்டெபினிற் | தெளிவற்ற |
| 317. | Indicate | In - di - cate | இன்டிக்கேட் | சுட்டிக்காண்பி |
| 318. | Individual | In - di - vid - u - al | இன்டிவிஜுவல் | தனித்தனியான |
| 319. | Inexpensive | In - ex -pen - sive | இன்னெக்ஸ்பென்சிவ் | மலிவான |
| 320. | Information | In - for - ma - tion | இன்பமேஷன் | தகவல் |
| 321. | Infrequent | In - fre - quent | இன்பிறீகுவன்ட் | அடிக்கடி நிகழாத |
| 322. | Innocent | In - no - cent | இன்ன சென்ட | மாசற்ற |
| 323. | Innumerable | In - nu - mer - a - ble | இன்னம்பரபிள் | எண்ணில் அடங்காத |
| 324. | Inquiry | In - quir - y | இன்குவிறி | விசாரித்தல் |
| 325. | Instructive | In - struc - tive | இன்ஸ்ட்ரக்டிவ் | அறிவூட்டுகிற |
| 326. | Instructor | In - struc - tor | இன்ஸ்ட்ரக்டர் | கற்பிப்பவர் |
| 327. | Insufferable | In - suf - fer - a - ble | இன்சபரெபிள் | சகித்துக்கொள்ளமுடியாத |
| 328. | Insufficient | In - suf - fi - cient | இன்சபிஷன்ட் | தேவைக்குக் குறைவான |
| 329. | Insult | In - sult | இன்சல்ட் | அவமதி |
| 330. | Intellectual | In - tel - lec - tu - al | இன்ரர்லெக்சுவல் | அறிவுசார்ந்த |
| 331. | Intelligent | In - tel - li - gent | இன்ரெலிஜென்ட் | அறிவுத்திறன்கொண்ட |
| 332. | Intensify | In - ten - si - fy | இன்ரென்சிபை | தீவிரமாக்கு |
| 333. | Intention | In - ten - tion | இன்ரென்ஷன் | நோக்கம் |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை
இலகுவழி ஆங்கிலம்-18 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035, 021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இரண்டு பூர்த்தி நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

## தீர்க்க சுமங்கலி

# திருமதி சசிகலா (மீனா) விஸ்வலிங்கம்



**தோற்றம்**
**11.02.1966**

**மறைவு**
**28.04.2008**

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
ஆதரவு காட்டிப் பாசமுடன் வாழ்ந்தீரே!
இன்ப வாழ்வில் இதய சுத்தியுடன்
ஈகையின் இருப்பிடமாய் உலகோர் புகழ
உத்தமியாய் வாழ்ந்து பத்தினியாய் இருந்தீரே!
ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
எங்குதான் சென்றீர் எனப் பரிதவித்து நிற்க
ஏன்தான் பிரிந்தீரோ! எங்களைத் தவிக்க விட்டு?
ஐங்கரன் அருளினால் அகிலமே போற்றிட
ஒருமுறை வந்துன் திருமுகம் காட்டீரோ?
ஓலமிட்டு அழுகின்றோம் ஓடியே வாரீரோ?
ஔடதமாய் விளங்கி எம் நோய் தீர்த்திட்ட
பெண்மணியே சசிகலா எமைப் பிரிய மனம் வந்ததோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி!**

இன்று (15.05.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரை நினைவு கூர்ந்து சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**லிங்கம் கவஞ்சியம்,**
**லிங்கம் கொம்னிகேசன்,**
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

நுணாவில் மேற்கு, மடத்தடி,
சாவகச்சேரி.

(பி.558566)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி சசிகலா (மீனா) விஸ்வலிங்கம் அவர்களின்

## ஞாபகார்த்தமாக வடிவமைக்கப்பட்ட

## வாணி சிலை, நுழைவாயில் வளைவு

# திறப்பு விழா




**இடம்:** யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., மட்டுவில், சாவகச்சேரி

**காலம்:** இன்று (15.09.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி

**தலைவர்:** திரு.மு.பாலசுப்பிரமணியம் *(அதிபர்)*

**பிரதம விருந்தினர்:** திரு. V.T.செல்வரத்தினம்

*(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்)*

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

28.04.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி சசிகலா (மீனா) விஸ்வலிங்கம்** அவர்களின்

ஓராண்டு நிறைவை முன்னிட்டு இன்று (15.05.2009) வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் பங்குகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லிங்கம் களஞ்சியம், *வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சிக்கல் இலங்கைக்கு இல்லை என்பது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சி

இன்று உலகளாவிய ரீதியில் சவாலாக அமைந்து போய்விட்ட விடயம் அண்மைக்கால உலக பொருளாதாரப் பின்னடைவு நிலையாகும்.

ஆனையப்பட்ட மேற்குலக பலவான்கள் - வளர்ச்சியடைந்த நாடுகள் தாம் எதிர்நோக்கநேர்ந்துள்ள இப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபட்டுக் கரையேறத் தத்தளிக்க நேர்ந்துள்ள இன்றைய நிலையில் எமது இலங்கை நாட்டின் அதிகாரத் தரப்பினரோ, இத்தகைய பொருளாதாரச் சிக்கல் நிலை இலங்கைக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை எனக் கூறி வருவதன் மூலம் முழுப் பூசணிக்காயைச் சேற்றினுள் மறைத்து நாட்டு மக்களை ஏமாளிகளாக ஆக்க முயன்று வருகின்றனர்.

இவ்விடயம் குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.

அண்மையில் இடம்பெற்ற இருபது உலக நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட மகாநாட்டில் பிரிட்டன் பிரதமர், கோடன் பிறவுண் அபூர்வமான கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

'வங்கியாளர்களும் கூட குடும்பங்களின் பெறுமதி குறித்துக் கற்றறிந்திருத்தல் இன்று ஒரு அவசிய தேவையாகும்' என்பதே பிரிட்டன் பிரதமர் தெரிவித்த அபூர்வமான அக் கருத்தாகும்.

மேற்குறித்த அவரது கருத்துக் குறித்து விரிவாக நோக்குவது பயனுடைத்ததொன்றாகும்.

ஒரு சாதாரண குடும்பம், தற்காலத்தில் தனது பொருளாதாரச் செலவீனங்களை மிகுந்த கவனத்துடன் திட்டமிட்டு மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடியும். தமக்கு வருமானமாக எவ்வளவு பணம் கிடைக்கிறது என்பதனை ஒவ்வொரு குடும்பத் தலைவரும் நன்கறிவர். தமக்குக் கிட்டும் வருமானத்தின் அடிப்படையிலேயே ஒவ்வொரு குடும்பத் தலைவரும் தத்தமது செலவீனங்களைத் திட்டமிட்டு மேற்கொள்கிறார். இதன் அடிப்படையில், அநாவசியச் செலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு எந்தவொரு குடும்பத் தலைவரும் பின்நிற்பதில்லை.

அதேவேளை எந்தவொரு குடும்பத்தின் பெரியவர்களும் தமது பிள்ளைகளது கல்விச் செயற்பாடுகளில் கடும் அக்கறை காட்டிச் செயற்படுகின்றனர். ஒரு நீண்டகால

சிங்கள மொழிமூலம்: எட்மண்ட் ரணசிங்க

அடிப்படையில் ஏற்படும் சிரமங்கள் குறித்துச் சிந்திக்காது, அது ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் கிட்டத்தக்க வாய்ப்புக்குறித்து கவனம் செலுத்த எந்தவொரு குடும்பமும் முயல்வதில்லை. இதே விதத்திலேயே வங்கி முகாமைத்துவமும் முன்னெடுக்கப்படவேண்டுமென்பதையே பிரிட்டன் பிரதமர் கோடன் பிறவுண் வலியுறுத்துகிறார்.

உண்மையில் தற்போது சிறிய திட்டமிடல்களை மேற்கொள்வோர் மேற்குறிப்பிட்ட விதத்திலேயே தமது பொருளாதாரம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். அத்தகையோர் தற்காலத்தில் பொறுப்பற்ற விதத்தில் தமது நிதியை முதலிடுவதையோ, செலவு செய்வதையோ முற்றுமுழுதாக நிறுத்திக்கொண்டுள்ளனர். பலதரப்பட்ட மாற்று வழிகள் மூலம் பணம் தேடிக்கொள்வதற்கு அத்தகையோர் தற்போது முயற்சிப்பதில்லை.

குறிப்பாக சொல்வதானால் குறிப்பிட்ட அத்தரப்பினர் தற்போது தம்மிடமுள்ள பணத்துடன் எழுந்தமானத்தில் விளையாடுவதில்லை. ஒரு வகையில் தமது பணத்தை அவசியமான விதத்தில்தான் முதலீடு செய்கிறோமா? அல்லது செலவு செய்கிறோமா? என ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்தித்து, முடிவெடுத்தே தமது பணத்தைச் செலவிடுகின்றனர்.

இது 1930களின் பின்னர் உலகில் இடம்பெற்றுள்ள பொருளாதாரப் பின்னடைவுக்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது எனக் கூறிவிட இயலும். அதன்படி, இன்றைய உலகில் வாழும் மக்கள் தமது வாழ்க்கையில் இத்தகைய சிக்கலுக்கு முகம் கொடுப்பது இதுதான் முதல் தடவையாகும்.

இப்பெரும் சிக்கலில் இருந்து மீள்வதற்கு வழியொன்றைத் தேடும் அதேவேளை, இச்சிக்கல் காரணமாக அவர்களது மன எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகள் பெருமளவில் மாற்றம் கண்டுள்ளன எனக் கூறினால் அதில் தவறேதும் கிடையாது. இத்தகைய சகல நிலைமாற்றங்களாலும் யதார்த்த நிலை வெளிப்படையாகப் புலனாகின்றது.

மேற்குலக நாடுகளும், சமூகங்களும் இதுவரைகாலமும் பணத்தைச் செலவு செய்வது பற்றிக் கேள்விப்பட்டிருக்குமே தவிர, அதனைச் சேமிப்பது குறித்து கேள்விப்பட்டிருக்கமாட்டா. உண்மையில் சொல்வதானால் சேமிப்பு என்ற பதம் அவர்களது அகராதியில் இடம்பெற்றிருந்ததில்லை. ஆனால் தற்போது இந்த நிலைமை மாற்றம் கண்டு வருகின்றது.

தற்போது அந்த தரப்புக்கள் சேமிப்பது குறித்தும், வாழ்க்கைப் பாதுகாப்புக் குறித்தும் ஆழமாகச் சிந்தித்து வருகின்றன; தம்மிடையே கருத்துப் பரிமாறி வருகின்றன. இதிலிருந்து இன்றைய உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்திவரும் பொருளாதாரச் சிக்கல் உலக மக்கள் மத்தியில் எத்தகைய அழுத்தத்தை ஏற்படுத்திவிட்டுள்ளது என்பதனை எம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

இதற்கான பொருத்தமான உதாரணமொன்றினைப் பிரிட்டனின் முடிக்குரிய அரச குடும்பத்தின் செயற்பாடுகளில் இன்று தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது.

பிரிட்டன் அரசி எலிசபெத் மகாராணி தொடக்கம் பிரிட்டன் அரச குடும்பத்து உறுப்பினர்கள் சகலரும் தற்போது தமது செலவீனங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டுள்ளனர் என சர்வதேச பிரபல சஞ்சிகையொன்று அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளது. பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் ஹரி அண்மையில் தாம் மேற்கொண்ட விமானப் பயணமொன்றின்போது சாதாரணதர இருக்கை வசதியைப் பயன்படுத்தியே தமது பயணத்தை மேற்கொண்டமை இதற்கானதொரு சமிக்ஞையாகக் கொள்ளத்தக்கதாகும்.

நாட்டு மக்கள் தமது செலவீனங்களைக் குறைத்து, கட்டுப்படுத்தி வாழ்வதற்கான வாழ்க்கைப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் நிலையில், அரச குடும்பத்து அங்கத்தினரும் அதே விதத்தில் தமது செலவீனங்களை மட்டுப்படுத்தி வாழ முயல்கின்றனர் என்பதனை நாட்டு மக்களுக்கு நிரூபிப்பதற்கானதொரு முயற்சி இதுவெனக் கருதமுடிகிறது. அவ்விதம் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்ட வேண்டிய தேவை அந்த அரச குடும்பத்து உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் கொள்ள [illegible].

இங்கிலாந்தின் நிலைமை இவ்வாறிருக்க, அமெரிக்காவில் பொதுமக்களோ தமது இன்றைய பொருளாதாரப் பின்னடைவு நிலைக்கு எதிரான போராட்டத்தை முதலில் வங்கியாளர் தரப்புக்கு எதிராகவே ஆரம்பித்துள்ளனர். அதேபோன்று மற்றுமொரு தரப்பினர் உலக நாடுகளின் தலைவர்களது மகாநாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்வதன் மூலம் தமது எதர்ப்பை வெளிப்படுத்தினர். இத்தகைய தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அவர்கள் வேறெதனையும் கோரவில்லை. நாட்டில் உருவாகியுள்ள பொளாதாரச் சிக்கலுக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டுமென்பதே அவர்களது கோரிக்கையாகும்.

தற்போது பெரும்பாலான பொதுமக்களது மனங்களில் உருவாகி வளர்ந்துவரும் சந்தேகம் - அச்சம், இன்றைய இப்பொருளாதாரப் பின்னடைவு நிலை முதலாளித்துவத்தின் முடிவாக ஆகிவிடப் போகிறதா? என்பதேயாகும். உண்மையில் அவ்விதம் எண்ணுவதற்கான நியாயமான காரணமும் உள்ளது.

குறிப்பிட்ட இந்தத் தரப்பினரின் இத்தகைய எதிர்ப்பு தனவந்தர் தரப்புக்கு எதிரானதொன்று மட்டுமல்ல. முதலாளித்துவத்துக்கும் எதிரான செயற்பாடுகளே அவையாகும். அந்த வகையில் இன்று உலகளாவிய ரீதியில் சகல பக்கங்களில் இருந்தும் முதலாளித்துவத்துக்கு எதிரான அழுத்தங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

ஒருசில தரப்பினர், இந்த விடயத்தில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமா மீதும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகத் தோன்றுகிறது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பல விதங்களில் முதலாளித்துவத்தைக் காப்பாற்றச் செயற்பட்டுவருவதாக அத் தரப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர். அதே சமயம் பிரிட்டன் பிரதமர் கோடன் பிறவுண் கூட இவ்விடயத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இந்தப் பிரச்சினையில் இருந்து நாட்டை விடுவித்து முன்னேற்றம் காணவைப்பதற்குத் தம்மாலான சகல முயற்சிகளையும் தாம் மேற்கொள்ள முயல்கிறார் எனப் பிரிட்டன் பிரதமர் அடிக்கடி கருத்து வெளியிட்டு வருகிறார். ஆனால் பொருளாதாரப் பின்னடைவு என்ற இந்தப் பாரிய பிரச்சினையைத் தீர்க்க எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் இன்னமும் அவர் தெளிவற்ற நிலையிலேயே இருந்து வருகிறார். அந்த வகையில் இப் பிரச்சினை பிரிட்டன் பிரதமருக்கு மட்டுமென்றல்லாது முழு உலகத்துக்குமே சவால் விடும் அளவுக்கு உருவாகிவிட்டுள்ள பாரிய பிரச்சினையொன்றாக ஆகியுள்ளது.

மிகப் பிரபல்யம் பெற்றதொரு பொருளாதார விற்பன்னரென மதிக்கப்படும் யோசெப் ஷம்பீற்றர் என்பவர் இன்றைய உலகளாவிய ரீதியிலான பொருளாதாரச் சிக்கல் நிலை தொடர்பாக வெளியிட்டுள்ள விமர்சனம் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.

முதலாளித்துவத்தின் முடிவை ஏற்படுத்தும் நச்சு விதை முதலாளித்துவத்தினுள்ளேயே தலையெடுத்திருக்கிறது என அவர் தெரிவித்துள்ளார். உண்மையில் இந்தக் கருத்து ஏற்புடையது ஒன்றுதானா? என்ற சந்தேகம் எவரொருவரது மனதிலும் உருவாக்கக்கூடும். அந்த வகையில் [illegible]போது [illegible] இன்று உருவாகியுள்ள இச் சிக்கல் நிலை உலக பொருளாதாரச் சிக்கல் மட்டுமே எனக் கொள்ளாது, உலக முதலாளித்துவத்தின் மத்தியில் உருவாகிவிட்டுள்ள சிக்கல் என்ற விதத்திலேயே கொள்ளவேண்டியுள்ளது.

முதலாளித்துவத்தின் சிக்கல் நிலை தற்போது தீவிரமடைந்துள்ளமை குறித்து சிந்திக்கும்போது பெரும்பாலோருக்கு நினைவுக்கு வருவது மார்க்ஸியவாதமே ஆகும். கார்ல் மாக்ஸ் 19 ஆம் நூற்றாண்டில் வெளியிட்ட மார்க்ஸிய சிந்தனைகளே தற்போது நிஜமாகிவருகிறது என்பது தற்போது பெரும்பாலோருக்கு நினைவுக்கு வருகிறதல்லவா?

இந்த விடயத்தில் இலங்கையின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிந்துகொள்வது பெறுமதிமிக்கதொன்றாகும். உலகளாவிய ரீதியிலான பொருளாதாரச் சிக்கல் தற்போது தீவிரமடைந்துள்ளமை காரணமாக இலங்கைக்குத் துளியளவு பாதிப்பும் ஏற்படவில்லை, ஏற்படப்போவதுமில்லை என ஒருசில அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். அக்கருத்து எந்தளவு தூரத்துக்கு உண்மையானது என்பதனைக் கற்றறிந்தோர் மட்டுமே அறிவர்.

தற்போது, நாட்டில் இதுவரை இயங்கிவந்த ஆடைக்கைத் தொழிற்சாலைகளில் எத்தனை இழுத்து மூடப்பட்டுவிட்டன? அத்தகைய தொழிற்சாலைகளில் வேலை பார்த்த எத்தனை தொழிலாளர்கள் தமது தொழிலை இழந்துள்ளனர்? குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த நிறுவனங்களில் எத்தனை நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளில் பணியாற்றிய ஊழியர்களுக்குச் சேரவேண்டிய சம்பளத்தை வழங்க இயலாத நிலைக்கு உட்பட்டுள்ளன.

அண்மைய சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்ட வேளையில், எத்தனை

தமிழில்: ராஜா


நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய பண்டிகை முற்பணத்தை வழங்க இயலாத நிலையில் அக்கொடுப்பனவை வழங்குவதைத் தவிர்த்துக்கொண்டன? இத்தகைய நிலையில் உலகளாவிய ரீதியிலான தற்போதைய பொருளாதாரச் சிக்கல் இலங்கையை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என எமது அரசியல்வாதிகளால் வாய்திறந்து கூறிவிட இயலுமா? இது குறித்த அந்த அரசியல்வாதிகளிடம் எவரால் கேள்வி எழுப்ப இயலும்? இத்தகைய நிலைப் பாட்டுக்கு எதிராக யார், எப்போது எதிர்ப்புத் தெரிவிக்கப்போகிறோம்?

இலங்கையைத் தவிர, உலகின் ஏனைய நாடுகளில் பெரும்பாலானவை தற்போது உருவாகியுள்ள உலகளாவிய ரீதியிலான பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபடும் மார்க்கம் குறித்து கவனம் செலுத்திச் செயற்பட்டு வருகின்றன. அதற்காக அந்த நாடுகள் ஓய்வு ஒழிச்சலின்றிச் செயற்பட்டு வருகின்றன. பலதரப்பட்ட மாற்று யோசனைகளைப் பரிசீலித்து அவற்றைப் பயன்படுத்திப் பார்த்து வருகின்றன. அந்த நாடுகளின் அத்தகைய முயற்சிகள் எந்த அளவுக்குப் பயனுள்ளவையாக அமையும் என்பதனைக் குறிப்பிட்ட பொருளாதாரச் சிக்கல் நிலையிலிருந்து அந்த நாடுகள் விடுபட்டுத் தலை தூக்குவதற்கு அந்நாடுகள் கடைக் கொள்ளும் அம்மாற்று வழிகள் எந்த அளவுக்கு வெற்றிகரமான - சாதகமான பெறுபேறுகளை வழங்கும் என்பதன் அடிப்படையிலேயே தீர்மானிக்க முடியும். உண்மையில் அது காலத்தால் நிர்ணயிக்கப்படவேண்டியதொன்றே. ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வசந்த மண்டப கலச கும்பாபிஷேகம் கடந்தமாதம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.



வரலாற்றுச் சிறப்புமிக்க பன்றித் தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திரு விழாவின்போது அம்பாள் தேரில் ஆரோகணித்து பக்தர்கள் சூழ வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம். (131)



அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற இலட்சார்ச்சனையின் போது எடுக்கப்பட்ட படம் . (120)



காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த அலங்கார உற்சவத்தில் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பறத்தில் அம்பாள் திருவீதி உலா வருவதைப் படத்தில் காணலாம். (250)

# மக்கள் படுகொலைக்கு எதிராக ஒபாமா குரல் கொடுக்க வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள்

நியுயோர்க், மே 15

இலங்கையில் வடக்கே பொதுமக்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டு வருவதற்கு எதிராகக் குரல்கொடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டிருக்கிறது.

அத்துடன், இலங்கையில் குழப்பகரமான நிலை குறித்து பாதுகாப்பு சபையை ஆராயுமாறும் அது கேட்டுள்ளது.

சர்வதேச சட்டங்கள் மீறப்படுவது குறித்து விசாரணை ஆணைக் குழுவை அமைப்பதற்கும் பராக் ஒபாமாவிடம் மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பொதுமக்கள் பாதுப்பாக வெளியேறுவதற்கு இருதரப்பும் தற்காலிக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள ஒபாமா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மோதல் நடக்கும் பகுதிக்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் செல்வதற்கு அனுமதியளிக்க இலங்கை அரசை, ஒபாமா கேட்க வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (அ-சி)

# இயற்கையே இறைவன்

தானாகவே தோன்றும் இயல்பினை மேற்கொண்டு இன்பத்தின் ஊற்றாய் பேரின்பத்தின் பிறப்பிடமாய் அண்டங்கள் தோறும் அகிலங்கள், கோள்கள், கிரகங்கள் எனப் பல்வேறு தோற்றப்பாடுகளைக் கொண்டு புரையோடும் கோலங்களை விரிவுபடுத்தி பரிணாம வளர்ச்சியை மேற்கொண்டு பல்கிப் பெருகிவரும் ஒரு மாபெரும் சக்தியே இயற்கை என்பதாகும். இந்த இயற்கையின் நியதிகளை இருவேறு பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று உயிருள்ளவை. மற்றயது உயிரற்றவை.

உயிரற்றவை என்று கூறும்போது அகிலங்கள், கிரகங்கள், கோள்கள் என்பவற்றினூடே நிகழ்ந்துவரும் நுகர்ச்சிப் பொருள்களாகிய ஒலி, ஒளி, நீர், காற்று முதலியன யாவும் அடங்கும். உயிருள்ளவை என்றால் மரம், செடி, கொடி முதல் நடமாடும் அறிவாற்றல் கொண்ட அத்தனை உயிரிணங்களும் அடங்கும். இவையனைத்தும் இயற்கையின் வழிவந்து செயற்பட்டுவரும் நிகழ்வுகளாகும்.

இனி இத்தகைய இயற்கையின் நிகழ்வுகளுக்கும் இறைமைக்கும் இடையே உள்ள தொடர்புகள்தான் என்ன என்பதை ஆராய்வோம். அதாவது எங்கெல்லாம் உயிரிணங்கள் வாழ வேண்டுமோ அங்கெல்லாம் உயிரற்ற படைப்புக்களின் அவசியம் தேவைப்படுகின்றது. உதாரணமாக சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களின் ஆட்சியினால்தான் உயிரிணங்களின் தோற்றமும், வாழ்வும், முடிவும் வளம் பெறுகின்றது. காற்று, நீர், உணவு முதலான அத்தனை தேவைகளும் இக்கோள்களின் இயல்பினாலேதான் உயிரிணங்களுக்குக் கிடைக்கப் பெறுகிறது. இதனால்தான் நாம் இந்தச் சக்திகளைத் தெய்வமாகப் பூசிக்கின்றோம்; விழா வெடுக்கின்றோம். ''காற்றில் மிதக்கும் ஒலிகளிலே கடலில் தவளும் அலைகளிலே இறைவன் இருப்பதை நானறிவேன். என்னை அவனே தானறிவான்?'' என்பது திரைப்படப் பாடலாகும். இன்னும் ஓசை, ஒலியெல்லாம் ஆனாய் நீயே உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே என்று அப்பர் சுவாமிகளும் தமது தேவாரப் பதிகத்தில் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.

ஞானக்கதிர்

உயிருள்ளவை என்னும்போது மரம், செடி, கொடி முதல் மனிதவர்க்கம் ஈறாக அனைத்து உயிரிணங்களிலும் இயற்கையின் உத்வேகம் கொண்ட இறைமையின் இசைவாக்கம் செல்வாக்குச் செலுத்துவதும் பரவலாக கலந்திருப்பதும் கண்கூடாக நோக்கத்தக்கது. இதனால் எல்லா உயிரிணங்களிலும் இறைவன் குடிகொண்டுள்ளான் என்பது புலனாகிறது. இதனை உணர்த்தவே மகாகவி பாரதி ''தெய்வம் பலபல சொல்லி பெரும் தீயை வளர்ப்பவர் மூடர் உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும் ஒரு பொருளானது தெய்வம் என்று பாடியுள்ளான்.

நன்மை, தீமை, கள்ளம், கபடம், வஞ்சனை, சூது என்ற குரோதப்போக்கு ஒன்றுமில்லாமலே மாசற்ற சோதியாய் மண்மீது குழந்தை பிறக்கிறது; மலர்கிறது. இதனைக் கண்ணுற்ற கவிஞன் ஒருவன் நான் கடவுளைக் கண்டேன்; என் குழந்தை வடிவிலே அவன் கருணையைக் கண்டேன்; கொஞ்சும் மழலை மொழியிலே என்று மனமகிழ்ந்து பாடுகிறான். இயற்கையின் வனப்பிலே இறைவன் குடிகொண்டிருப்பதை இப்பாடல் விளக்குகின்றதல்லவா?

முருகுப்பிள்ளை செல்லத்தம்பி,
அச்சுவேலி.

# வாசகர் திருமுகம்

## ஓரங்கட்டப்படும் எமது கிராமம்

எனது இல்லத்திற்கு இன்பர்சிட்டி மின்பிறப்பாக்கியில் இருந்து சக்கோட்டை பிள்ளையார் ஆலய வீதியூடாகவே மின்சாரம் வருகின்றது. கடந்த 25.04.2009 அன்று அதிகாலை 4 மணிக்கு மின்சாரம் இல்லை. நான் 25.04.2009 அன்று அதிகாலை 5.30 மணிக்கு நெல்லியடியில் இருக்கும் மின்சாரசபைக்கு முறைப்பாடு செய்தேன். ஆனால் மின்சாரம் எமக்கு இதுவரையில் கிடைக்கவில்லை. மின்சாரசபையை கேட் கும்போது அவர்கள் பொறுப்பான முறையில் செயற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

எமது கிராமமானது எப்போதும் நெல்லியடி மின்சார சபையினால் ஓரங்கட்டப்பட்டு வருகின்றது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். அதாவது ஒரு கிழமையில் நான்கு நாள்களாவது எமக்கு மின்சாரம் கிடைக்காது. மேலும் எமக்கு மின்சாரம் கிடைக்கும் பட்சத்திலும் அதிகாலை 4 மணியிலிருந்து காலை 9 மணிவரை மோட்டார், கணனி என்பவை இயக்க முடியாதுள்ளது. அதேபோல் மாலையிலும் இதே நிலைதான். மேலும் எனது வீட்டுக்கு அருகாமையில் உயிர் காக்கும் கியூமெடிக்கா வைத்தியசாலை உள்ளது. இதற்காகவென்றாலும் மின்சாரத்தை ஒழுங்காகக் கொடுக்கலாம். ஆனால் அதுவும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. எங்கள் கிராமத்தில் சுனாமி வீட்டுத்திட்டங்கள் நிறைய உள்ளன. எனவே மின்சாரம் ஒழுங்கான முறையில் கிடைக்க ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அல்வாய். க.சுதேஸ்.

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு கிடைக்குமா?

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை, புயல் காற்றினால் விவசாய மக்கள் அனைவரும் பெரும் பாதிப்புக்குள்ளாகினார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களது விவசாய சம்மேளனங்கள் ஊடாக இரு தடவைகள் பயிர் அழிவிற்கான பதிவுகளை மேற்கொண்டனர். ஆனால் இதுவரையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து எந்த விதமான தீர்வும் கிடைக்கவில்லை. அந்த வகையில் விவசாயிகள் பெரிதும் மன முடைந்து பயிர் அழிவிற்கான நிவாரணங்கள் ஏதும் கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் காத்திருக்கின்றார்கள்.

கோப்பாய். ந.கனகலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## விவாக சோபன சுபமுகூர்த்த அழைப்பு

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் வைகாசி மாதம் முதலாம் நாள் (15.05.2009) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி முதல் 08.30 மணிவரையுள்ள சித்த யோகமும் உத்திராட நட்சத்திரமும் இடப லக்கினமும் கூடி வரும் சுபமுகூர்த்த வேளையில்

சுப்பையா சர்மா
இராசம்மா
தம்பதியரின்
பௌத்திரனும்
கார்த்திகேஸ்சர்மா
கோமதியம்மா
தம்பதியரின்
புத்திரனுமாகிய
திருநிறை
செல்வன்
சிவானந்த சர்மா
(சிவா)



கந்ததாஸ் ஐயர்
நாகரத்தினம்மா
தம்பதியரின்
பௌத்திரியும்
நித்தியானந்த சர்மா
ஜெகதீஸ்வரி
தம்பதியரின்
புத்திரியுமான
திருநிறை
செல்வி
கிரிஜா

ஆகியோருக்கு

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்து வைப்பதற்கு மாணிக்கப்பிள்ளையார் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி முகூர்த்தம் சுவீடன் செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

சுபம்.

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மணமக்களை வாழ்த்துபவர்:
உ.திலகேஸ்வரசர்மா
(பெறாமகன்).

(85307)

## மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்



செல்லையா வைத்தியநாதன்
சுன்னாகம் தெற்கு, கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலராக பன்னிரெண்டு ஆண்டுகள் ஒப்பற்ற சேவையாற்றி ஓய்வுபெற்ற திரு.செல்லையா வைத்தியநாதன் (J.P.) அவர்களை (15.05.2009) வெள்ளிக்கிழமை பாராட்டி கௌரவிக்கின்றோம்.

காந்திருபன் சனசமூக நிலையமும், வாழ் மக்களும், நிர்வாகிகளும்.

(85314)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினரால் சிறந்த நூலகராகத் தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்ட யாழ்.பொதுசன நூலகத்தின் பிரதம நூலகர் திரு.சபாரட்ணம் தனபாலசிங்கம் அவர்கள் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: நூலக தனியார் அகல் பாதுகாப்பு சேவை நிர்வாகமும் ஊழியர்களும்.

(85311)

## காரிருளில் மூன்றாண்டு

மலர்ந்தது
02 . 01 . 1987



உதிர்ந்தது
15 . 05 . 2006

### செல்வி லாவண்யா மாணிக்கம்

(யசோ- உயர்தர மாணவி)

திதி: அபரபட்ஷ துதியை (09.06.2009)

பாடி நடந்த பாவை
பாதியிலே எமைப் பிரிந்து
விண்ணிற்கு சென்றதேன்?
தீயில் மெழுகாய் உருகி
தினம் தினம் கலங்கி நிற்க
விண்ணிறங்கி நீ எப்போ வருவாயோ?
என மனம் தவிக்குது பாரினிலே
நீ எம்முடன் இருப்பதாக எண்ணியிருக்க
எம் நெஞ்சமதில் நீங்காத யசோவே.

'லாவண்யம்',
614/3, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கும்
குடும்பத்தினர்.

(85308)


### விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். பிரதேச செயலக பிரிவிற்குள் ஆறுமாத கால மரவேலைப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்வோர் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தமது சுய விவரங்களுடன் பிரதேச செயலர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### திறந்த பல்கலைக்கழக மாணவர் கவனத்திற்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்ட மேற் கல்வி டிப்ளோமாவுக்கு 2009, 2010 ஆம் ஆண்டுக்குப் புதிதாகப் பதிவு செய்த மாணவர்கள் அனைவரையும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார் (204)


### தவறிவிட்டது

செல்வராஜா இரகிம்ராஜா என்பவரின் மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் கோப்பாய்க்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அப்பாக்குட்டி செல்வராஜா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (85318)

### பணிநிலை வேண்டுகை

1. ஒப்புநோக்குநர் (A/L தமிழுடன், கணனி அறிவு அவசியம்)
2. புத்தகம் கட்டுநர்

17.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி - 4 மணி வரை நேரில் வரவும்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில்.

(85315)

### உடன் தேவை

இல. 300, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் விரைவில் ஆரம்பமாக உள்ள கணனி நிலையத்திற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை.

(Page Maker, Photo shop, Coreldraw தெரிந்திருப்பது விரும்பத்தக்கது) 25.05.2009க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.


# ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை 148 மாணவர்களுக்கு [illegible] யாழ். இந்துவில்

யாழ்ப்பாணம், மே15

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளுக்கு மேல் பெற்ற, ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சைக்குத் தெரிவான யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இப்பரீட்சை ஆங்கில மொழி மூலமே இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு யாழ்.மாவட்டத் திலிருந்து 148 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவானோரின் பெயர் விவரம் வருமாறு:

ரி.பாசுபதன் (மீசாலை, வீரசிங்கம் ம.வி.), எம்.சங்கீர்த்தனா (நெல்லியடி மெ.மி.த.க.), ஜெ.போல்ஜான்சன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கே.சத்தியகுமார் (சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சி.பிரான்சிஸ் அருள்நாயகம் (சென்.ஜோன் பொஸ்கோ), வி.மிகுந்தன் (சென் ஜோன் பொஸ்கோ).

கே.சிறிதுஷன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.சிறிசங்கீதன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஆர்.லோகிதா (சண்டிலிப்பாய் வடக்கு ரி.எம்.), ஜே.நிசூதனன் (சென் பெனடிக்ற் றோ.க.தமிழ் கலவன் பாடசாலை).

கே.மாதுரி (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), என்.வர்ணராஜ் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), வி.பாவோதயன் (சென். ஜேன்ஸ் கல்லூரி), என்.செந்தூரன் (யாழ். இந்து ஆரம்பப் பாட சாலை).

ஏ.ஆரண்யன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஜே.தயாநந்தன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.சிவகரன் (நாவற்குழி மகா வித்தியாலயம்), எஸ்.குணமேகலா (மகாஜனாக் கல்லூரி), எஸ்.அகல்யன் (தம்பசிட்டி எம்.எம்.ரி.எம்.).

எஸ்.சிவனுஜா (ஜோன்.பொஸ்கோ), வி.வினோஜா (டிறிபேக் கல்லூரி), டி.நிர்மலேஸ்வரன் (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.நீரஜன் (நெல்லியடி மெ.மி.த.க.), பி.சர்வேஸ்வர சர்மா (யாழ்.ஆரம்பப் பாடசாலை), ஜி.தவனுகா (கல்வயல் சிறிசண்முகாநந்தா வித்தியாலயம்), ரி.மயூரி (மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்).

ஆர்.லோஜிதன் (தம்பசிட்டி மெ.மி.த.க.), என்.சுமித்திராசாந் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), பி.கினுஜா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ரி.வாசவன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.திலுக்ஷன் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்), என்.விதுசன் (தம்பசிட்டி மெ.மி.த.க.).

ரி.தட்சயன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எல்.தர்சிகன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.பிரவீண் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கே.சிவதீபன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), யூட் தர்சனா (கரணவாய் தாமோதர வித்தியாலயம்), எஸ். கனகாம்பரி (சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்).

யு.கஜனி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எம்.கோகுலன் (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.அஜீவா (இணுவில் மத்திய கல்லூரி), எஸ்.ஸ்ரலின்ராஜ் (அருணோதயாக் கல்லூரி), ரி.அபிசேகா (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), கே.ராகுலன் (ஞானாசாரியார் கல்லூரி).

எஸ்.மிதுன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), ஆர்.துளசிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஆர்.சதுர்சன் (வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ்.சஞ்சீவன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ஏ.அலோசியஸ் (ஜோன் பொஸ்கோ), கே.கனுஸ்டியா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), எம்.கோகுலன் (ஆனைப் பந்தி மெ.மி.த.க).

எஸ்.நிலக்சன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்.), வி.கீர்த்திகா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்.), எஸ்.ஜெனுபன் (ஜோன் பொஸ்கோ), எஸ்.ராகுலன் (ஜோன் பொஸ்கோ), வி.விக்னேஸ்வரன் (ஜோன் பொஸ்கோ), ஜி.ஜெயஜீபன் (ஜோன் பொஸ்கோ).

கே.பைரவி (ஜோன்.பொஸ்கோ), ஆர். சஜீந்திரா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.திவாகரன் (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை), பி.வைகுந்தன் (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை), எஸ். சாயிசுதன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கே.கபின்சன் (சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை), ஆர்.வியானி (சாவகச்சேரி ஆரம் பப் பாடசாலை), எம்.கார்த்திகா (ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்), எஸ். தருஜா (உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம்), ஆர்.ஸ்ரீமோகன் (ஜோன் பொஸ்கோ), எஸ். தஷரத் (சென். ஜோன்ஸ் கல்லூரி), எ.தயாசகரி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), பி.ஸ்ரீசா யுஜா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), வி.பகீரதன் (சாவகச்சேரி ஆரம்பப் பாட சாலை), கே.ராசேந்திர (உடுவில் மக ளிர் கல்லூரி), எம். அமலன் (திரேசா மகளிர் கல்லூரி, அச்சு வேலி), கே.மதுரந்தா (யாழ்.சரவண பவானந்தா, கோப்பாய்), எஸ். விஜிந்தினி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சிந்துஜா (திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்), ஐ.சிவநாதன் (சென். பொஸ்கோ), வை.சங்கவி (சென். பொஸ்கோ), எஸ்.சுபாநிலா (சென். பொஸ்கோ).

என்.சரண்யா (சென்.பொஸ்கோ), எஸ். தனுசா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), எம்.சுர்த்திகா (வரணி எம்.வி.), ஜே. திருக்குமரன் (நவாலி எம்.வி.), எஸ்.உதர்ஷன் (மல்லாகம் கனிஸ்ட வித்தியாலயம்), எம்.கவியரசன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), பி.அக்ஷா (சென்ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.சிவசாந்தி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை).

தி.கிரிபரன் (ஆனைப்பந்தி எம்.எம்.ரி. எம். பாடசாலை), பி.திவிஜா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஆர்.ஆதித்யா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ஜே.பிரணவன் (இணுவில் மத்திய கல்லூரி), எஸ்.திவாகரி (இணுவில் மத்திய கல்லூரி), யூ.கஜானி (குப்பிளான் விக்னேஸ்வரா எம்.வி), எஸ்.லலிதகாந்தன் (நெல்லியடி எம்.எம்.ரி.எம், பாடசாலை), ஆர்.ராகவன் (புன்னாலை கனிஷ்ர வித்தியாயலம்), ஜெ.நிஷோபா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

என்.டிலுக்ஸ் (வதிரி இருதயக் கல்லூரி), ரி.சுதானிகா (ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம், காரைநகர்), வி.சாயிகா (சென். பொஸ்கோ), பி.பாபிலன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), தி.கரிதாஸ் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.வைஸ்ணவி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), வி.உருத்திரமூர்த்தி (மகளிர் மகாவித்தியாலயம் சாவகச்சேரி), எஸ்.பிரணவசுதன் (யாழ்.வட்டு. இந்துக் கல்லூரி).

எஸ்.அருந்தவராஜா (உடு வில் மகளிர் கல்லூரி), டி.ஜெயசாந்தன் (புன்னாலைக் கட்டுவன் ஜி.ரி.எம்.எஸ்), ஜெ.தக்ஷாயினி (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாயலம்), எஸ்.மாதங்கி (சென்.திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி), எஸ்.பஞ்சிகா (கரம்பன் ராமுபிள்ளை வித்தியாலயம்), பி.மிஷாந்தி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), கே.யுவேகா (நெல்லியடி எம்.எம்.ரி.எம்.பாடசாலை).

தி.சங்கவி (வதிரி இருதயக் கல்லூரி), ஆர்.தமிழரசி (கற்கோவளம் எம்.எம்.ரி.எம். பாடசாலை), எஸ்.சாருஜன் (புலோலி கிழக்கு, ஜி.ரி.எம்.பாடசாலை), எம்.குருபராஜா (சென். பொஸ்கோ, யாழ்ப்பாணம்), வி.லூசிக்கா நிறோஜினி (சென்.பொஸ்கோ), தி.தயாபரன் (சென்.பொஸ்கோ).

ரி.வாதுஷா (யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தி), ஐ.திலக்ஷனா (கொழும்புத்துறை துரையப்பா வித்தி), எஸ்.ஜெலராசன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.சிவசங்கரி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), கே.யுவநீதா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), ஆர்.யதுர்சிகா (யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை), எம்.கேமகாந்தி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

எஸ்.சாரங்கன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), கே.ஜெயந்தன் (மட்டுவில் தெற்கு அ.மி வித்தி), கே.லக்ஷி (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி), ஜி.காயத்திரி (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), ஆர். தணீசன் (நெல்லியடி மெ.மி.த.க), எஸ்.முகுந்தன் (சென்மேரிஸ் ஆர்.சி.ரி.எம்), எம்.பிருந்தினி (ஜோன் பொஸ்கோ வித்தி), எஸ். கௌசிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ்.நிவேனுதன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை).

எம்.காயத்திரி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.கிருத்திகா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ஜி.கேதீஸ்வரன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஆர்.மதுஷா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), ரி. மதுஷா (மீசாலை வீரசிங்கம் ம.வி), வி.மதனிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி), ரி.றஜித்தா (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி), கே. தர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டு).

கே.சநாதனி (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டு), வி.யோகலிங்கம் (உடுவில் மகளிர் கல்லூரி), ஏ.ஸ்ரீபானுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.விநிஸ்தன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி), எம்.சஞ்சீவன் (உடுப்பிட்டி அமெரிக்கன் அ.மி கல்லூரி), பி. வினோஜன் (வல்வெட்டி விநாயகர் வித்தி), ரி.தயரூபன் (தும்பளை சிவப்பிரகாசம் ம.வி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில் வெல்லப் போவது யார்?

# மத்தியில் தொங்கு நாடாளுமன்றமா?

# தமிழகத்தில் அ.தி.மு.கவுக்கு வாய்ப்பு

### கருத்துக்கணிப்பில் தகவல்

புதுடில்லி, மே 15

தேர்தலுக்குப் பிந்திய வாக்குக்கணிப்பில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியும் ஏறக்குறைய சம அளவில் தொகுதிகளைக் கைப்பற்றும் என்று எதிர்வுகூறப்படுகிறது.

இருப்பினும் எந்த ஓர் அணிக்கும் பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பில்லை. இதனால் தொங்கு நாடாளுமன்றம் என்ற நிலை உள்ளது.

மக்களவைக்கு 5ஆவது மற்றும் கடைசிக் கட்ட வாக்குப்பதிவு புதன்கிழமை நடைபெற்றது. அதன் பின்னர் பல்வேறு தொலைக்காட்சி ஊடகங்கள் வாக்குக் கணிப்பை வெளியிட்டன.

டைம்ஸ் நவ் வெளியிட்ட கருத்துக் கணிப்பு முடிவின்படி -

காங்கிரஸ் - 154, பா.ஜ.க. 142, இடதுசாரிகள் -38, இதர கட்சிகள் - 209.

சி.என்.என்.- ஐ.பி.என். வெளியிட்ட கருத்துக்கணிப் பு முடிவின்படி -

காங்கிரஸ் 145 - 160, பா.ஜ.க. 135 - 150, 3 ஆவது அணி 110 - 130, இதர கட்சிகள் 70 - 100.

ஸ்டார் நியூஸ் வெளியிட்ட கருத்துக் கணிப்பு முடிவின்படி -

காங்கிரஸ் - 199, பா.ஜ.க. 196, 3ஆவது அணி 100, இதர கட்சிகள் - 36.

ஹெட்லைன்ஸ் டுடே வெளியிட்ட கருத்துக்கணிப்பு முடிவின்படி -

காங்கிரஸ் - 191, பா.ஜ.க. - 180, இடதுசாரிகள் - 38, இதரகட்சிகள் - 134.

இண்டியா டி.வி. வெளியிட்ட கருத்துக் கணிப்பு முடிவின்படி -

காங்கிரஸ் - 195, பா.ஜ.க. - 194, 3ஆவது அணி - 108, இதர கட்சிகள் - 46.

நியூஸ் எக்ஸ் வெளியிட்ட கருத்துக் கணிப்பு முடிவின்படி -

காங்கிரஸ் - 199, பா.ஜ.க. 191, 3ஆவது அணி - 104, இதர கட்சிகள் - 48.

டைம்ஸ் நவ் தொலைக்காட்சி சில மாநிலங்களுக்கான கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளது.

பீகாரில் ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பா.ஜ.க. கூட்டணி மொத்தம் உள்ள 40 தொகுதிகளில் 29 தொகுதிகளைக் கைப்பற்றும் எனத் தெரிவித்துள்ளது. லாலு - பாஸ்வான் கூட்டணிக்கு 6 தொகுதிகளும், காங்கிரஸுக்கு 3 தொகுதிகளும் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அ.தி.மு.க. 23, அதன் கூட்டணிக் கட்சிகள் 5, தி.மு.க. 7, காங்கிரஸ் 4.

ஆந்திரப் பிரதேசத்தில் புதிதாகத் தொடங்கப் பட்ட நடிகர் சிரஞ்சீவியின் கட்சிக்கு 4 இடங்களும், காங்கிரஸுக்கு 15 இடங்களும், தெலங் கானா ராஷ்ட்ர சமிதி மற்றும் தெலுங்கு தேச கூட்டணிக்கு 20 தொகுதிகளும் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.கவுக்கு 23, காங்கிரஸுக்கு 6.

அசாமில் பா.ஜ.க. கூட்டணிக்கு 7, காங்கிரஸுக்கு 5.

குஜராத்தில் மொத்தம் உள்ள 26 தொகுதிகளில் பா.ஜ.க.வுக்கு 19, காங்கிரஸுக்கு 7.

ராஜஸ்தானில் காங்கிரஸுக்கு 13, பா.ஜ.கவுக்கு 10, சுயேச்சைகள் 2.

கேரளத்தில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணிக்கு 15, மார்க்சிஸ்ட் கூட்டணிக்கு 5.

கர்நாடகத்தில் பா.ஜ.கவுக்கு 16, காங்கிரஸுக்கு 9, மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு 3.

மகாராஷ்டிரத்தில் காங்கிரஸ் 12, தேசியவாத காங்கிரஸ் 11, பா.ஜ.க. 13, சிவசேனை 12.

மேற்கு வங்கத்தில் மம்தாவின் திரிணமூல் காங்கிரஸ் - காங்கிரஸ் கூட்டணிக்கு 17, மார்க்சிஸ்ட் கூட்டணிக்கு 24.

உத்தரப் பிரதேசத்தில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சிக்கு 27, சமாஜ்வாடி கட்சிக்கு 23, பா.ஜ.க. 14, காங்கிரஸ் 13 எனக் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 18இல் டில்லியில் கூடுகிறார்கள் 3 ஆவது அணித் தலைவர்கள்

### அ.தி.மு.க., பகுஜன் கட்சி பங்கேற்பு

புதுடில்லி, மே 15

அ.தி.மு.க., பகுஜன் சமாஜ் உட்பட மூன்றாவது அணித் தலைவர்களின் கூட்டம் டில்லியில் வரும் 18ஆம் திகதி நடைபெறுகிறது.

ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்க தெலங்கானா ராஷ்ட்ர சமிதிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பகுஜன் சமாஜ் சார்பில் அக் கட்சியின் தலைவர் மாயாவதி பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதா பங்கேற்பாரா அல்லது அவரது பிரதிநிதி பங்கேற்பாரா என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இடதுசாரிக் கட்சிகளின் கூட்டம் டில்லியில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடை பெறுகிறது. அதைத் தொடர்ந்து மறுநாள் எங்கள் கட்சியின் அரசியல் தலைமைக் குழுக் கூட்டம் நடைபெறுகிறது. அன்றைய தினமே மூன்றாவதுஅணித்தலைவர்களின் கூட்டமும்நடைபெறும்.

இது முதல் கூட்டம்தான் தேவைக்கேற்ப தொடர்ந்து கூடிப் பேசுவோம் - என்றார் காரத்.

தெலுங்கு தேசத்தை தங்கள் அணிக்கு இழுக்க பா.ஜ.க. முயற்சித்து வருவதாக கேட்டபோது, நான் தினமும் தெலுங்கு தேசத் தலைவர் சந்திரபாபு நாயுடுவைத் தொடர்புக் கொண்டு பேசி வருகிறேன்.

இந்தக் கூட்டம் குறித்த அறிவிப்பை வெளியிடச் சொன்னதே அவர்தான் - என்றார் காரத்.

காங்கிரஸ் மற்றும் பாஜக அல்லாத அணியை உருவாக்குவதில் நாயுடு முனைப்புடன் செயற்பட்டார் என காரத் சுட்டிக்காட்டினார்.



மதச்சார்பற்ற ஜனதாதளத் தலைவர் குமாரசாமி காங்கிரஸ் தலைவர் சோனியாவைச் சந்தித்தது குறித்து கேட்டபோது, தேவகௌடா தங்கள் கட்சியின் நிலையை ஏற்கனவே தெளிவு படுத்திவிட்டார். மூன்றாவது அணியை உருவாக்கியதில் முன்னின்று செயற்பட்டவர் கௌடா - என்று கூறினார் காரத்.

அ.தி.மு.க., தெலுங்கு தேசம், மதச்சார்பற்ற ஜனதாதளம் ஆகிய கட்சிகள் எம்மாதிரியான நிலைப்பாட்டை எடுக்கும் என்று கேட்ட போது, அவர்கள் என்ன முடிவு எடுப்பார்கள் என்று அவர்களிடம் தான் கேட்ட வேண்டும். அவர்கள் சார்பில் நான் பேச முடியாது. ஆனால் இடது சாரிக் கட்சிகளுடன் பகுஜன் சமாஜ், அ.தி.மு.க., தெலுங்கு தேசம், பஜு ஜனதாதளம் ஆகிய கட்சிகள் இக் கூட்டத்தில் பங்கேற்கும் என்று அவர் தெரிவித்தார்.

# அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கட்சியினருடன் சோனியா ஆலோசனை



புதுடில்லி, மே 15

தேர்தல் முடிவு வெளியான பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, கட்சியின் மூத்த தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களவைத் தேர்தலுக்கான 5ஆவது மற்றும் இறுதிக் கட்ட வாக்குப் பதிவு புதன்கிழமை நிறைவுபெற்றது. தேர்தல் முடிவுகள் வரும் 16ஆம் திகதி வெளியிடப்படுகின்றன.

அடுத்து ஆட்சியமைக்க உதவியாக புதிதாக வேறு சில கட்சிகளை தங்கள் கூட்டணிக்கு கொண்டுவர காங்கிரஸ், பா.ஜ.கவினர் தீவிர மாக முயற்சித்து வருகின்றனர்.

இந்நிலையில் காங்கிரஸ் தலைவர்களுடன் சோனியா காந்தி, புதன்கிழமை இரவு ஆலோசனை நடத்தினார். தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதேபோல பிரதமர் மன்மோகன் சிங்கும், பிரணாப் முகர்ஜி, ஏ.கே. அந்தோனி உள்ளிட்டோருடன் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார்.

தற்போது காங்கிரஸ் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், புதிய கட்சிகளை கூட்டணியில் இணைப்பது குறித்து பிரதமருடன் விவாதிக்கப் பட்டது எனத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மோகன் பிரகாஷ், அடுத்து மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைப்பது குறித்து ஆலோசிக்கப் பட்டது. 220 முதல் 225 இடங்களில் நாங்கள் வெற்றி பெறுவோம். மேலும் பல கட்சிகள் எங்கள் கூட்டணிக்கு வரும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

## இந்தியச் செய்திகள்

# இடதுசாரிகள் முக்கிய பங்கு வகிப்பர்

### சோம்நாத் சட்டர்ஜி

கோல்கத்தா, மே 15

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த தேர்தலைக் காட்டிலும் இம்முறை குறைந்த தொகுதிகளிலேயே வெற்றி பெறும். அதே சமயம் மத்தியில் ஆட்சி அமைவ தற்கு இடதுசாரிகள் முக்கிய பங்குவகிப்பர் - என்று மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி தெரிவித்தார்.'

இதுகுறித்து கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டி வருமாறு -

தேர்தல் முடிவுக்குப் பின்னர் இடதுசாரிகளை யாரும் ஒதுக்கிவிட முடியாது. மத்தியில் ஆட்சி அமைப்பதில் இடதுசாரிகள் முக்கிய பங்கு வகிப்பர் என்ற நம்பிக்கை உள்ளது. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள் என்பதற்காகச் சொல்லவில்ல்லை. கடந்த தேர்தலைக் காட்டிலும் மார்க்சிஸ்ட் கட்சிக்கு இம்முறை குறைந்த இடங்களே கிடைக்கும். ஆனால் இடதுசாரிகள் இல்லாமல் யாரும் ஆட்சி அமைத்திட முடியாது - என்றார்.




கட்சியில் மீண்டும் இணைவீர்களா? மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா தங்களுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறாரா என்று நிருபர்கள் அடுக்கடுக்காக அவரிடம் கேட்டனர். அதற்கு அவர் கூறியவை வருமாறு -

நான் மீண்டும் மீண் டும் சொல்கிறேன். தெளிவாகக் கூறுகிறேன். நான் கட்சியை விட்டு வெளியேறவில்லை. இதில் எவ்வித மாற்றமுமில்லை. கட்சியிலிருந்து வெளியேறுவதா அல்லது இணைவதா என்பது குறித்து புத்ததேவுடன் நான் பேச்சு ஏதும் நடத்தவில்லை.

கட்சிக்கு தகுதியானவன் இல்லை என்று என்னை ஒதுக்கிவைத்திருக்கலாம். அவர்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக நான் எதிர்த்துப் போராட விரும்பவில்லை. நான் சுயமாகத்தான் செயற்பட்டு வருகிறேன். மீண்டும் கட்சிக்கு நான் வருவேனா என்பது முக்கியமல்ல, வரலாறு தான் அதை தீர்மானிக்கும் - என்றார்.

### தொடர்ந்து 7 மகள்கள் பிறந்த போதும்

# ஆண் குழந்தை வேண்டி 35 ஆண்டுகளாக குளிக்காமல் தீக்குளியல் போடும் விவசாயி!



லக்னோ, மே 15

அடுத்தடுத்து 7 பெண் குழந்தைகள் பிறந்ததால் ஆண் குழந்தை பிறக்க வேண்டி கடந்த 35 ஆண்டுகளாக விவசாயி ஒருவர் குளிக்காமல் இருக்கிறார். இவர் தினமும் மாலையில் வீட்டுக்கு முன் விறகுக் கட்டைகளை போட்டு தீ மூட்டி, அதன் அருகில் ஒற்றை காலில் நின்று சிவனை வழிபடுவார்.

தங்களுக்கு வாரிசாக ஆண் குழந்தை ஒன்று வேண்டும் என்பது பெரும்பாலானவர்களின் ஆசை. அடுத்தடுத்து 2 பெண் குழந்தைகள் பிறந் தாலும், அடுத்தது ஆணாக இருக்கும் என்ற ஆசையில் மூன் றாவது குழந்தை பெற்றுக் கொள்பவர்கள் அதிகம்.

இப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் கைலாஷ் சிங். இவர் உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசி அருகேயுள்ள சதவ் கிராமத்தைத் சேர்ந்தவர். ஆண் வாரிசு வேண்டும் என்று கைலாஷ் சிங்கும், அவரது மனைவியும் ஆசைப்பட, அடுத்தடுத்து பெண் குழந்தைகள் பிறந்தன. இப்படி 7 மகள்கள் பிறந்த நிலையில், கைலாஷ் சிங்குக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது.

இதனால், சாமியார் ஒருவரை பார்த்து தன் மனக்குறையை கொட்டியுள்ளார். அதற்கு அந்தச் சாமியார், ''நீ இனிமேல் தண்ணீரில் குளிக்காதே. தீக் குளியல் போடு. விரைவில் ஆண் குழந்தை பிறந்துவிடும்'' என்று கூறியுள்ளார்.

இதையடுத்து, கடந்த 35 ஆண்டுக்கு முன் தண்ணீரில் குளிப்பதை கைலாஷ் சிங் விட்டு விட்டார். தினமும் மாலையில் வீட்டுக்கு முன் விறகுக் கட்டைகளை போட்டு தீ மூட்டி, அதன் அருகில் ஒற்றை காலில் நின்று சிவனை வழி படுவார். இதற்கு பெயர் தீக்குளியல் என்று கூறிய கைலாஷ் சிங், இப்படி செய்வதால் உட லில் உள்ள கிருமிகள் செத்துவிடுவதாக கூறு கிறார். அவரிடம் இருந்து துர்நாற்றம் வீச ஆரம் பித்தது. இதனால், கைலாஷ் நடத்திய மளிகைக் கடையில் பொருள்கள் வாங்குவதை கிராம மக்கள் தவிர்க்கத் தொடங்கினர். ஒரு கட்டத்தில் நஷ்டம் தாங்காமல் கடையை மூடிய கைலாஷ், அப்போதும் குளிக்க மறுத்துவிட்டார். பின்னர், விவசாயத்தில் கவனம் செலுத்தி கடந்த 35 ஆண்டுகளாக தினமும் தீக் குளியல் போடு வதை மட்டும் கைவிடவில்லை.

இப்போது அவருக்கு 63 வயது ஆகிறது. ஆண் குழந்தை வேண்டி இப்படி குளிக்காமல் இருக்கலாமா என்று அவரிடம் கேட்டதற்கு, நாட்டின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும் வரை குளிக்காமல் இருக்க சபதமேற்றிருக்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அமைப்புக்களுடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள்

## யாழ். அரச அதிபரின் அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே15

வன்னியில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு ஐ.நா. அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள 3,865 குடும்பங்களைச் சேர்ந்த 11,168 பேர்களுக்கான நலன்புரி நிலையங்கள் 12 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் விவரங்கள் வருமாறு:-

| நலன்புரி நிலையம் | குடும்ப எண்ணிக்கை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் திருநகர் | 74 | 143 |
| கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | 219 | 529 |
| மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை | 570 | 1737 |
| கொடிகாமம் அ.த.க. பாடசாலை | 302 | 989 |
| கைதடி சைவச் சிறுவர் இல்லம் | 74 | 208 |
| கைதடி பல்கலைக்கழக விடுதி | 420 | 1,101 |
| கைதடி PRI -1 | 247 | 715 |
| கைதடி PRI -11 | 213 | 626 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 427 | 1,257 |
| கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 391 | 1,178 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 455 | 1,370 |
| நெல்லியடி மத்திய கல்லூரி | 473 | 1,227 |
| தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்துக்கு மாற்றப்பட்டது | | 82 |
| மொத்தம் | 3865 | 11,168 |

நலன்புரி நிலையங்களின் பராமரிப்புச் சம்பந்தமாக 12.05.2009 அன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் ஐ.நா. நிறுவனங்கள் செஞ்சிலுவைச் சர்வதேச்க் குழு, நலன்புரிநிலையங்களுக்கு செல்ல அனுதிக்கப்பட்டுள்ள சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன பங்கு பற்றின. இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நலன்புரி நிலையங்களுக்கான தங்குமிட வசதிகள்**

தங்குமிட வசதிகளுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிறுவனத்துடன் தங்குமிட வசதிகளை அமைத்துக்கொடுக்கும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படும்.

**நீர்விநியோகமும் சுகாதாரமும்**

யுனிசெவ், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகிய நிறுவனங்களின் ஒருங் கிணைப்புடன் தேசிய நீர் வடிகால் அமைப்புச் சபை நீர்விநியோக நடவடிக்கைகளை திட்டமிட்டு செயற்படுத்தும். சகல நலன்புரி நிலையங்களுக்கும் தேவையான குடிதண்ணீர், சமையலுக்குத் தேவையான நீர், குளிப்பதற்கு தேவையான நீர், சுகாதார வசதிக்கான நீர் என்பவற்றை ஒதுக்கீடு செய்து போதியளவு நீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு தேசிய நீர் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு புதிதாக கொடிகாமத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற நலன்புரி நிலையத்துக்குரிய நீர் விநியோக நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சர்வதேச குழு நிறுவனமும் தேசிய வடிகால் அமைப்புச் சபையும் மேற்கொண்டுள்ளன. இந்த நலன்புரி நிலையத்துக்கு வேம்பிராய் கிராமத்தில் உள்ள குழாய் கிணற்றிலிருந்து நேரடியாக குடி தண்ணீரை விநியோகிப்பதற்கு குழாய்களை பொருத்துவதற்கு யுனிசெவ் நிறுவனம் உதவி செய்வதாகவும் கைதடியில் உள்ள 3 நலன்புரி நிலையங்களுக்கும் நாவற்குழி உணவுக் களஞ்சியம், நாவற்குழி வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றில் உள்ள 3 கிணறுகள் மற்றும் அயலில் உள்ள 2 கிணறுகளுமாக மொத்தம் 5 கிணறுகளில் இருந்து நீர்விநியோக இணைப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றிகுரிய நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கு யுனிசெவ் நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. வேலைகள் தற்பொழுது நடைபெறுகிறது. மேலும் ஒரு நீர்தாங்கியினையும் ஒரு கழிவகற்றும் வாகனத்தையும் கொண்டு வருவதற்கு ஐ.ஒ.எம். நிறுவனம் முன்வந்துள்ளது. இது விடயமாக மாவட்டச் செயலகம் பலாலி இராணுவ கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டு இவற்றை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

**உணவு விநியோகம்**

சகல நலன்புரி நிலையங்களிலும் சமைப்பதற்குரிய ஏற்பாடுகளையும் மேலும் தேவையான சமையல் பாத்திரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வழமை போல் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனமும் சேவா லங்கா நிறுவனமும் இதற்குரிய உதவிகளை தொடர்ந்தும் வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

**குடும்பத்திற்குரிய உணவற்ற நிவாரணம்**

இதற்குரிய ஒருங்கிணைப்பு வேலைகள் அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. உணவற்ற நிவாரணப்பொருள்களை தாமாகவே முன்வந்து வழங்க விரும்புபவர்கள் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**குடும்பத்துக்குரிய பொதிகள்**

குடும்பத்துக்குரிய பொதிகள் அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடனும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நிறுவனத்தின் மூலமும் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ள நாலாயிரம் குடும்பங்களுக்கான உணவு, உடை பொதிகள் யாழ். மாவட்டத்துக்கு வந்து சேர்ந்தவுடன் அவற்றை மாவட்டச் செயலகத்தின் அனுசரணையுடன் மேற்படி நிறுவனங்கள் மூலம் விநியோகம் செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**குடும்பங்களின் ஒருங்கிணைப்பு**

60 வயதுக்கு மேற்பட்டோரை விடுவித்தல், நலன்புரி நிலையங்களில் உறவினர்களை நேரடியாகச் சென்று பார்வையிடல், நலன்புரிநிலைய வசதிகள் தொடர்ந்து பேணப்படுகின்றன.

**பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை விநியோகம்**

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் தேவைக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட பதிவுகள் இம் மாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பிரதேச செயலர் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இற்றைவரை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான 250 விண்ணப்பங்கள் முதலாவது தொகுதியாக கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றை வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது 76 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 26 விண்ணப்பங்கள் தேடுதல் மேற்கொள்ளப்பட்டும் போதிய தகவல் இல்லாததால் விநியோகிக்க முடியவில்லை. 32 விண்ணப்பங்கள் கொழும்புப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு பிறப்புச் சான்றிதழ்கள் கூடிய விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது தொகுதியாக 859 விண்ணப்பங்கள் மாவட்டப் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**பிறப்பு, இறப்புக்கான பதிவு விவரங்கள்**

நலன்புரி நிலையங்களில் ஏற்படுகின்ற பிறப்பு, இறப்புக்களை உடனடியாகப் பதிந்து கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கல்வி**

கோப்பாய், கொடிகாமம், மிருசுவில் ஆகிய இடங்களில் தற்போது பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. கைதடிச் சைவச் சிறுவர் இல்லம், கைதடி பல்கலைக்கழக மாணவர் விடுதி, கைதடி பனை அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிப்பதற்கு யுனிசெவ் நிறுவனமும், கல்வித் திணைக்களமும் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றன. அத்தோடு புதிதாகக் கொடிகாமத்தில் ஆரம்பிக்கப்பட்டு வருகின்ற நலன்புரி நிலையத்திற்கு தேவையான கல்வி வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை யுனிசெவ் நிறுவனம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**சுகாதாரமும், போசாக்கும்**

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர்களுக்கான போசாக்கு உணவுகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு பல்வேறு நலன்விரும்பிகளின் உதவியுடன் சிறுவர்களுக்கு தேவையான சத்துணவுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகளைச் சரியான தரத்தில் , சரியான அளவில், சரியான நேரத்தில் வழங்கவேண்டிய அவசிய தேவை இருக்கின்ற காரணத்தினால் இதற்குரிய பணிகளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மூலம் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஆகவே குழந்தைகளுக்கான போஷாக்கு உணவுகளை வழங்குவதற்கு விரும்புகின்ற நிறுவனங்கள் தயவு செய்து யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள் - என்றுள்ளது.

# பாதுகாப்பு, அபிவிருத்தி, மீள்குடியேற்றம் குறித்து வடக்கிற்கு பஸில் தலைமையிலான செயலணி

## ஜனாதிபதி மஹிந்த ஏற்பாடு

கொழும்பு, மே, 15

வட மாகாண அபிவிருத்தி, மீள்குடியேற்றம், பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கென நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழு அதிகாரங்களைக் கொண்ட செயலணியொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பின் 33 (ஈ) பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஏதுவாக இச்செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

19 பேர் கொண்ட இச்செயலணியின் தலைவராக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் அதன் செயலாளராக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

முக்கிய அமைச்சர்களின் செயலாளர்கள், பிரதான பாதுகாப்பு அதிகாரி, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் ஆணைக்குழு, நிறுவனங்களின் முக்கியஸ்தர்களைக் கொண்டதாக இச் செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஜனாதிபதி செயலணியின் முதலாவது அமர்வு அதன் தலைவர் பஸில் ராஜபக்ஷவின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதியினால், நியமிக்கப்பட்டுள்ள செயலணியினூடாக இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல் புனர் வாழ்வளித்தல், வடமாகாண பொருளாதார, சமூக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான திட்டங்களை வகுத்தல், அவற்றை செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புகளைச் செய்தல்.

மேற்படி நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அரச பாதுகாப்புப் பிரிவினரின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்.

குறிப்பிட்ட மாகாண அதிகாரிகள், உட்பட சம்பந்த[illegible] முன்னெடுக்கப்படும் திட்டங்களைக் கண்காணித்தல்.

முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு அரச, தனியார் மற்றும் தனிப்பட்ட நபர்களின் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதும், ஒருங்கிணைப்பை ஏற்படுத்தலும்.

மேற்படி செயலணியின் உத்தியோக பூர்வ பணிப்புரைகளை, உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள், தடைகளுக்கு உடனடித் தீர்வு காணவும் உடனடியாக மாற்று வழிகளைக் கண்டறியும் விதத்தில் இச்செயலணி செயற்படும்.

இதேவேளை செயலணியின் நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதிக்கு அவ்வப்போது அறியத்தர வேண்டும் என்றும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன் மேற்படி செயலணியின் நடவடிக்கைகளின்போது உதவிகள் அல்லது சரியான தகவல்கள் கேட்கப்படும் பட்சத்தில் தவறாது சரியான தகவல்களையும் தாமதமின்றி வழங்கவேண்டும் எனவும் சகல அரச ஊழியர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன் என ஜனாதிபதி கூறினார்.

மேலும் எந்தவொரு அரச ஊழியரோ அல்லது எந்தவொரு அமைச்சிலோ, அரச திணைக்களமோ, அரச கூட்டுத்தாபனமோ, அல்லது இவ்வாறான நிறுவனங்களிலுள்ள ஊழியர் எவரோ நியமிக்கப்பட்ட செயலணியின் மூலம் வழங்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும், தவறவிடுவாராயின், அவ்வாறு அவர் தவறவிட்ட சந்தர்ப்பங்களை உடனடியாக தமக்கு அறியத்தரவேண்டும் என்றும் செயலணிக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட செயலணிக்கு வழங்கப்பட்ட ஆணைக்கமைய செயற்பட்டு தனது செயற்பாடுகளைப் பூர்த்தி செய்த பின்பு ஒரு வருட காலத்தினுள் தமக்கு அறிக்கையிடுமாறும் ஜனாதிபதி செயலர் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார். (சி)

## முதியோர் சங்கத்தினருடன் இன்று கலந்துரையாடல்

நவாலி, மே 15

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு பிரதேச செயலர் றூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து முதியோர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருந்தவராசா கேட்டுள்ளார். (1-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முல்லைத்தீவில் கோரத் தாண்டவமாடும் போரில் பிணக் குவியல்களாகிக் கிடக்கும் பாதுகாப்பு வலய மக்களில் ஒரு பகுதியினர்...

# 129 ஓட்டங்களுடன் சுருண்டது சென்னை 2 விக்கெட்டுகளால் பெங்களூர் அதிரடி வெற்றி

DLF IPL

டர்பன், மே 15

ஐ.பி.எல். ருவன்ரி-20 போட்டிகளில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ஒன்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை அதிர்ச்சித் தோல்விக்குள்ளாக்கி சாதித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். ருவன்ரி-20 போட்டிகளில் நேற்று நடைபெற்ற 44 ஆவது ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

சென்னை சார்பாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக விஜயும், மத்தியூ ஹைடனும் களமிறங்கினர். தொடக்க வீரரான விஜய் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கலீஸின் பந்தில் உத்தப்பாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுரேஸ் ரெய்னா (13), தோனி (18) என பெவிலியன் திரும்பினார்.

சென்னை 102 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த ஹைடன் கும்ளேயின் பந்தை உயர்த்தி அடிக்க எல்லைக்கோட்டருகே களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த வினய் குமாரினால் சிக்ஸர் செல்ல விடாது அழகிய முறையில் பிடி எடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். அடுத்து வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை எண்களுக்குள்ளேயே தமது விக்கெட்டுக்களை பறி கொடுத்தனர். ஓரம்(7), பத்ரிநாத் (2), மோர்கல் (9) என வெளியேறினர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் 118 ஓட்டங்களைப் பெற்றபோது தொடர்ச்சியாக 3 விக்கெட்டுக்களை இழந்தது. 128 ஓட்டங்களைப் பெற்ற வேளை முரளிதரன் பிரவீன்குமாரால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். அடுத்து வந்த ராஜகியும் 2ஓட்டங்களை ஓடிப் பெற முனைந்த போது பிரவீன்குமாரால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட சென்னை அணி 19.4 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

பெங்களூர் றோயல்ஸ் சார்பில் பந்து வீசிய கும்ளே, கலீஸ், வினய்குமார் ஆகியோர்தலா 2விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், வான்டேர் மேர்வ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸின் ஆரம்ப வீரர்களான கலீஸ் ஓட்டம் எதனையும் பெறாமலும் உத்தப்பா 6ஓட்டங்களுடனும் மோர்கலின் பந்தில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் வெளியேற்றப்பட்டனர். ராவிட் 8 ஓட்டங்களுடன் வெளியேற ரெய்லர் பொறுப்புணர்ந்து அழகாக ஆடி 46 ஓட்டங்களையும் கோலி (38), பௌச்சர் (5), வான் டேர் மேர்வ் (3), அஹ்கில் (0) என ஆட்டமிழக்க அணி 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பின்னர் வந்த பிரவீன்குமார் 12 ஓட்டங்களையும் வினய்குமார் 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற பெங்களூர் 8 விக்கட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சென்னை சார்பில் பந்து வீசிய மோர்கல், ஓரம் தலா 2விக்கட்டுகளைப் பெற முரளிதரன், பாலாஜி, ராஜகி ஆகியோர் தலா ஒரு விக்கட்டை வீழ்த்தினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரருக்கான விருதினை துடுப்பாட்டத்தில் பிரகாசித்த ரெய்லர் தட்டிச் சென்றார். (06)

## ஐ.பி.எல். அணிகளின் தற்போதைய நிலை

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமனிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| டெல்லி டேர்டெவில்ஸ் | 10 | 8 | 2 | 0 | 16 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 11 | 6 | 4 | 1 | 13 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 6 | 5 | 1 | 13 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 11 | 6 | 5 | 0 | 12 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 5 | 6 | 1 | 11 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 11 | 5 | 6 | 0 | 10 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 1 | 9 | 1 | 03 |

# ஷெல், கனரக ஆயுதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி பராக்ஒபாமா இலங்கையின் மோதலில் ஈடுபட்டுள்ள இரண்டுதரப்புக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைதொடர்பாக முதன் முறையாக நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அமெரிக்க ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

வன்னியில் தற்போது காணப்படும் மனிதாபிமான நெருக்கடி மனிதப் பேரழிவாக மாறக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அரிசோனாவுக்கான தனது விஜயத்தின் முன்னர் வெள்ளைமாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

பொதுமக்களில் ஆயிரக்கணக்கானோர் இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதலில் இருந்து தப்புவதற்கு வழியின்றியும், உணவு ,மருந்து, குடிதண்ணீர் போன்றவற்றுக்கான வாய்ப்புகள் இன்றியும் யுத்த பிரதேசத்தில் சிக்குண்டுள்ளனர். இதன் காரணமாக நூற்றுக்கணக்கானோர் பலியாகும் நிலையும், பரந்துபட்ட துயரமும் ஏற்பட்டுள்ளது.

இதில் தொடர்புபட்ட அரசியல் விடயங்களை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு மோதலில் அப்பாவித்தனமாக இடைநடுவில் சிக்கியுள்ள மக்களின் உயிர்களுக்கு முதன்மையளிக்க வேண்டிய தருணமிது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, பொதுமக்கள் வெளியே செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். அவர்கள் பொதுமக்களைப் பலவந்தமாகத் தமது அணியில் சேர்ப்பதும் மனித கேடயங்களாகப் பயன்படுத்துவதும் கண்டிக்கத்தக்கவை. இந்தத் தந்திரோபாய செயலானது இதனை மேற்கொள்பவர்களை தனிமைப்படுத்தப்படுவதற்கே உதவும்.

பாதுகாப்பு வலயம் மீது கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலும், கனரக ஆயுதத் தாக்குதலும் மேற்கொள்வதை அரசு நிறுத்த வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் உள்ள பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகளும், செஞ்சிலுவைக் குழுவும் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதியளிக்க வேண்டும்.

''இலங்கை அரசு தனது அனைத்துப் பிரஜைகளுக்கும் கௌரவத்தை வழங்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்ப டுத்த முயலவேண்டும். மேலும் பொது மக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதும், புனர்வாழ்வு நிலையங்களில் சிக்கியுள்ளவர்கள் மீதான அக்கறையின்மையும் சமாதானத்தை அடைவதைத் தடுக்கும்.''

-இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# உத்தியோகபூர்வமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்கு இணங்க மறுத்து வந்தன.

எனினும் கடந்த வாரம் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தில் உயிரிழந்த சம்பவம் இந்த நாடுகள் உத்தியோக பூர்வமான விதத்தில் இலங்கை குறித்து ஆராய வேண்டுமென்ற விடயத்தில் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு உதவியுள்ளது. அமெரிக்காவின் ஆதரவுடன் பிரான்ஸ், பிரிட்டன், ஒஸ்ரியா ஆகியன வெளியிட்டுள்ள பாதுகாப்புச் சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் மோசமடையும் மனிதாபிமான நிலை குறித்து பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகள் ஆழ்ந்த கவலையை வெளியிடுகின்றன. குறிப்பாக கடந்த சில நாள்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன.

பாதுகாப்புச் சபை பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறது.

பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளையும், தொடர்ந்தும் அவர்கள் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்துவதையும் கடுமையாகக் கண்டிக்கின்றனர்.

### தமக்குள்ள கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும்

விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போட்டு மோதல் நடைபெறும் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களை விடுவிக்க வேண்டும்.

அதிகளவு பொதுமக்கள் வாழும் பகுதியில் தொடர்ந்தும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப்படுவது குறித்த தகவல்கள் காரணமாக பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகள் ஆழ்ந்த கவலை வெளியிடுகின்றன. இலங்கை அரசு இது தொடர்பாகத் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் தமக்குள்ள கடப்பாட்டை அனைத்து தரப்புக்களும் நிறைவேற்ற வேண்டும்.

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவதற்கு உதவக்கூடிய மேலதிக அவசர நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும். அத்துடன் இந்த மக்களுக்கு அவசர மனி தாபிமான விநியோகங்கள் வேண்டும்.

### மனிதாபிமான குழுக்களுக்கு அனுமதி வேண்டும்

இடம் பெயர்ந்த மக்களின் மனிதாபிமான நிலைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாதுகாப்பு சபை கருத்திலெடுத்துள்ளது.

இந்த மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்குழு மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு செல்வதற்கு அனுமதியை வழங்குமாறும் இலங்கையைக் கேட்கிறது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் தனிப்பட்ட பங்களிப்பிற்கு பாதுகாப்பு சபை தனது ஆதரவை தெரிவிப்பதுடன் மனிதாபிமான நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஐ.நாவிற்கு முழு ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறது.

பாதுகாப்பு சபை நீண்ட கால தீர்வைக் காண வேண்டியதன் அவசியத்தை குறித்தும் கவனத்தில் கொண்டுள்ளது - என்று உள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பாதுகாப்பு வலயத்துக்குள் செல்ல ஐ.நா. பிரதிநிதிகளை அனுமதிக்கமுடியாது

## யுத்தநிறுத்தமும் இல்லை என்கிறது அரசு

கொழும்பு, மே 15

வன்னி பாதுகாப்பு வலயத்திற்குள் செல்வதற்கு ஐ.நாவின் பிரதிநிதிகள் ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டார்கள், அவர்களுக்கான பாதுகாப்பை எம்மால் உறுதிப்படுத்த முடியாது. இதேவேளை சர்வதேச சமூகங்கள் கொடுக்கும் எந்த அழுத்தங்களுக்கும் அரசு அடிபணியாது -

இவ்வாறு இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தனவே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்காகப் படையினர் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். இந்த நிலையில் அந்தப் பாதுகாப்பு வலயத்துக்குச் செல்ல ஐ.நா.பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று எம்மிடம் கோரிக்கை விடப்படுகின்றது.

இந்தக் கோரிக்கையை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. அங்குள்ள நிலைமையைக் கருத்திற்கொள்ளும்போது அங்கு செல்பவர்களின் பாதுகாப்பை எம்மால் உறுதிப்படுத்த முடியாது.

அங்கு செல்பவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினாலும் எமது படையினர் மீதே பழி சுமத்தப்படும். நிலைமையை நன்கு அறிந்துவைத்துக்கொண்டு ஐ.நா.பிரதிநிதிகளை அங்கு செல்ல எம்மால் அனுமதிக்க முடியாது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு கூட பாதுகாப்பு வலயத்துக்குள் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லப் பயப்படுகிறது. பாதுகாப்பு இல்லை என்று கூறுகின்றது.

நாங்கள் கூட அப்பகுதிக்கு மிகச் சிரமத்தின் மத்தியில்தான் உணவுப் பொருள்களை அனுப்பி வருகிறோம்.

காசா போன்ற பகுதிகளில் இவ்வாறு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் செல்ல வேண்டும் என்று கோரப்படுவதில்லை. எமது நாட்டுக்கு மட்டும் இது விதிவிலக்காக உள்ளது. இதை அனுமதிக்க முடியாது - என்றார். (அ-சி)

### முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் எடுத்துச் சென்றபோதிலும், அவற்றை கரை சேர்க்க முடியாமல் அடுத்தடுத்து மூன்று நாள்கள் திரும்பிச் செல்ல நேர்ந்தது-

மற்றும் அதனால் போரில் காயமடைந்தவர்களையும் மற்றும் நோயாளர்களையும் திருகோணமலைக்கு ஏற்றிச் செல்ல முடியாத தமது நிறுவனத்தின் இயலாமை குறித்தும் நேற்று விளக்கமளித்த போதே கரஹன் புஹுல் மேற்கண்டவாறு கவலையுடன் தெரிவித்தார்.

அங்குள்ள நிலைமை குறித்து அவர் பின்வருமாறு விவரித்தார்:-

பாதுகாப்புக் குறித்து நிரம்பவே உறுதியளிக்கப்பட்ட போதிலும், தரைப் பகுதியில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளதால் கடற்போக்குவரத்து தடைப்பட நேர்ந்தது.

ஆகக் கடைசியாக இம்மாதம் 9 ஆம் திகதி உணவு மற்றும் மருந்துப்பொருள்களை கப்பலில் கொண்டு சென்று இறக்கிவிட்டு காயமுற்றவர்களையும் நோயாளர்களையும் ஏற்றி வந்தோம்.

உலக உணவு திட்டத்தின் 500 மெ.தொன் உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற கப்பல் முல்லைத்தீவு துறையிலேயே தரித்து நிற்கிறது.

அங்குள்ள எமது பணியாளர்கள் கற்பனையும் செய்ய முடியாத அளவிலான மனிதாபிமானப் பேரவலத்தைக் காணநேர்ந்துள்ளது. எந்த மனிதாபிமான தொண்டு நிறுவனமும் அங்குள்ள மக்களுக்கு உதவ முடியாத பாதகமான பாதுகாப்புச் சூழலே உருவாகி உள்ளது.

சண்டை தணிந்தபாடில்லை. குறுகிய நிலப்பரப்பில் சிக்குண்டுள்ள மக்கள் தமது கைகளாலேயே பதுங்கு குழிகளைத் தோண்டி அவற்றுக்குள் பாதுகாப்புத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதனால் குடி தண்ணீருக்கும் உணவுக்கும் பெரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அந்த மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு எமது பணியாளர்களுக்கு போதிய பாதுகாப்பும் தடைப்படாத போக்குவரத்து வசதியும் தேவை.

இப்போதைய நிலைமை சீரடைந்ததும் எமது பணியாளர்கள் மக்களுக்கு தொண்டாற்ற ஆயத்தமாக உள்ளனர் - என்றார் கரஹன் புஹுல். (அ)

### 1,500 பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு மேலும் தெரிவித்தது.

அங்கு தொடரும் சண்டையில் சிக்கி காயமடைந்த 12 பேரை மீட்டு ஹெலி மூலம் அநுராதபுர ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றதாக விமானப்படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார தெரிவித்தார். (அ-1)

### பாதுகாப்பு வலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரலைக் கேட்டு சகிக்க முடியாதுள்ளது என்று அந்த வைத்திய அதிகாரி தெரிவித்தார் எனவும் இணையத்தளங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய சுமார் 400 இற்கும் மேற்பட்ட காயமடைந்த பொதுமக்கள் இன்னமும் வைத்தியசாலையில் தங்கியுள்ளனர்.

மேலும் புதைக்கப்படாத நிலையில் நூறுக்கும் அதிகமான சடலங்கள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரியை மேற்கோள் காட்டி இணையத்தளங்கள்தகவல்வெளியிட்டுள்ளன. (அ-சி)

### இரத்தக்களரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் நாயகம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் புதன்கிழமை தொடர்பு கொண்டு தெரிவித்திருந்தார் என்றும் ஒக்காபே அம்மையார் மேலும் கூறினார் - என்று ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது. (அ-1)

### ரணிலுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் யுத்தத்தை நிறுத்தக் கோரி கோஷமெழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோரில் 50 பேரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்தனர் எனத் தகவல்கள் தெரிவித்தன.

### கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவித சட்ட விதிகளையும் மீறாமல் அதே வேளையில் இயன்றளவு அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் இசை முழக்கமிட்டு பல்வேறு முழக்கங்களையும் எழுப்பியவாறு பேரணி இடம்பெற்றது.

பேரணியில் பல்வேறு வெளிநாட்டு மனிதநேய அமைப்புகள், சமூக அமைப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளும் அவர்களது குழுக்களும் கலந்து கொண்டதுடன், பல நாட்டைச் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டனர். (அ-சி)

### ஒபாமாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான நடவடிக்கைகளை எடுத்து, இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டிய மரபுவழி மனிதநேயத் தலைமைப் பொறுப்பிலிருந்து பின்வாங்கிவிட்டன.

எனவே, இப்பொறுப்பை பராக் ஒபாமா ஏற்று முன்நடத்திச் செல்ல வேண்டும் என்று எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**அமைதியை ஏற்படுத்தும் பணிகளுக்கு ஆதரவு**

ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியதைப் போல, இலங்கையின் பாதுகாப்பான, அதேநேரத்தில் நீடிக்கக்கூடிய அமைதியை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் நிலையான போர் நிறுத்தத் திற்கும் அமைதியை ஏற்படுத்தும் பணிகளுக்கும் நாங்கள் ஆதரவளிக்கிறோம்.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டு இறுதித் தீர்வு எட்டப்படும் வரை தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவே நாங்கள் ஆயுதம் ஏந்தியிருக்கிறோம்.

இலங்கையில் தன்னாட்சியுடைய சுயநிர்ணய உரிமையும், விடுதலையும் வழங்கப்பட வேண்டும் என்ற தமிழர்களின் வேட்கைக்காக, இலங்கையின் எந்தப் பகுதியில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களை இலங்கை அரசு தண்டித்து வருகிறது.

தமிழர் தாயகத்தின் மீது போர் தொடுத்த இலங்கை அரசு, படைத் தரப்பின் தாக்குதலுக்கு அஞ்சி பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அடைக்கலம் புகுந்த தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்ற உலக நாடுகளின் வலியுறுத் தல்களை மீறித் தாக்குதல் நடத்தி வருகிறது; அவர்களை வதை முகாம்களில் அடைத்து வைக்கிறது.

இலங்கைத்தீவு முழுவதும் அப்பாவித் தமிழ் மக்கள் திடீரென மாயமாவது போன்றவை சுதந்திரமான சாட்சிகள் இல்லாமல் நடைபெற்று வருகின்றன.

**உலக சமுதாயத்தின் கண்கள் மூடி மறைக்கப்படுகின்றன**

ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியதைப் போல தமிழ் மக்களைப் பாதுகாக்க உலக மனிதநேயமான சமுதாயத்தின் உடனடி நடவடிக்கை இப்போதைய தேவையாகும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பேரிலும் மனிதநேயமான மீட்பு நடவடிக்கை என்ற பேரிலும் மனித இழப்புக்களைப் பற்றி கவலைப்படாமல் தாக்குதல் நடத்திவரும் இலங்கை அரசு உலக சமுதாயத்தின் கண்களை மூடி மறைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறது.

இலங்கையில் மனிதாபிமான சிக்கலைப் போக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி பராக் ஒபாமா உறுதியாக வலியுறுத்தியிருப்பதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளில் நடுநிலையான மனிதநேயமான உதவிப் பணியாளர்களும், ஊடகத்துறையினரும் இருக்க வேண்டியது உடனடித் தேவையாகும்.

இலங்கை தமிழர்களின் துன்பம் பற்றி விளக்குவதற்காகத் தமது நேரத்தை ஒதுக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு நாங்கள் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


பிரத்தியேக வகுப்புக்கள்
2009 ஆம் ஆண்டு G C E (O/L) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு
★ கணிதம் ★ விஞ்ஞானம் ★ ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
ஆரம்பம் 16/05/2009 சனி 10 a.m
சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்
ஆசிரியர்:- M.சிவநாதன்
விவரங்களுக்கு Jaffna Technical Institute
No 45 Clock Tower Road, Jaffna
T.P.2226434, 0779748743

A/L 2011
பொருளியல்
K.பிரதீபன் (BBA)
Sat, Sun 10am
Batch நாளை ஆரம்பம்
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்.நகர்
Sat, Sun 3pm
Batch I
நடைபெறுகிறது.

நியூட்டன் அக்கடமி
அரசடி வீதி, நல்லூர்.
புதிய பிரிவு 3மாத காலத்தில் சரளமாக உரையாட.
சிங்களம்
By: லீலாகிருஷ்ணன்
ஆரம்பம் 16.05.2009
SAT 3.30 P.M
NEW BATCH SPOKEN ENGLISH WITH
GRAMMAR
By: KARAN
START-16.05.2009 SAT 2. P.M
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

SHAMROCK (BEST STAFF)
* A/L 2011 கலை, வர்த்தக, கணிதம் புதிய பிரிவுகள்
* C/MATHS
T.தவசீலர் B.SC.
SAT,SUN,3 P.M
* CHE-M.A .நிரோஜன்
* PHY-K. சுஜன்
* GR.1 முதல் O/L வரை
* I.C.T. GR. 9,10,11
* ENG.MEDIUM 6 TO 11
O/L DAY CLASS

A/L 2011
அரசியல்
திரு.ஸ்ரீரங்கநாதன்
ஆரம்பம்
16.05.2009 சனி 12 P.M
யூனிவேர்சல்

BEACON (வெலிங்டன் சந்தி அருகில்)
பொருளியல் R.Arunan (B.com)
பொதுப் பொருளாதாரம்
A/L 2010 ஆரம்பம் - 16.05.2009
SAT-11.00-12.00

கற்சுமி வெளியீடு
தரம் 1-5மாணவர்களுக்குரிய ஏப்பிரல்-மே மாத இதழ்கள்
அம்மா அன்னை நாம் அறிவு தேடல்
வெளிவந்துவிட்டன
"உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"

SUBRA 14
(சித்தன்கேணி)
2009/2010
கணித, விஞ்ஞான பிரிவு
Paper Class
16.05 2009
காலை 8.30
அனுமதிகள் வழங்கப்படுகிறன.

G.A.Q யாழ், பேராதனை 2009/2010
★ B.A Part I, II
★ B.A பேராதனை.
விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18,ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)யாழ்ப்பாணம்.

நாளை ஆரம்பம்
A/L 2011

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
|---|---|---|
| சித்திரம் | றமேஸ் | 12 - 1 |
| விவசாயம் | விக்கி | 1 - 2 |

DMI
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Jun 01 தொ
மாபெரும் கருத்தரங்கு
Jun 28 வரை
பொருளியல் (2009 ஆகஸ்ரை நோக்கி)
22 ஆம் திகதிக்கு முன் பதிவுகளை செய்யவும்
8 வெளியீடுகள் (200/=) வழங்கப்படும்.
யாழில் D.M.I = By: S.S.சிறி (B.COM) = வடமராட்சியில் CRISTAL (நெல்லியடி)
தொண்டமனாறு பரீட்சைக்கமைய நேர அட்டவணை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.